# சொல் புதிது சுவை புதிது

தமிழன்னல்

# சொல் புதிது

# சுவை புதிது

*தமிழ்ச் சுவை அறிவோம் தமிழராய் உயர்வோம்*

தமிழண்ணல்

விற்பனையுரிமை

**மீனாட்சி புத்தக நிலையம்**

48, தானப்ப முதலி தெரு, மதுரை-1

முதற் பதிப்பு : அக்டோபர், 2002
இரண்டாம் பதிப்பு : மார்ச், 2010

பதிப்புரிமை : ஆசிரியர்க்கு

தமிழண்ணலின் பவளவிழா வெளியீடு

**விலை : ரூ. 30.00**

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சொல் புதிது சுவை புதிது |
| ஆசிரியர் பெயர் | : | தமிழண்ணல் |
| தாளின் தன்மை | : | வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 18x12.5 செ.மீ(கிரௌன்) |
| அச்சு எழுத்து அளவு | : | 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : | 80 |
| நூலின் விலை | : | **ரூ.30.00** |
| ஒளி அச்சு | : | ஐ கேட்சர், மதுரை. |
| நூல் அச்சிட்டோர் | : | பரமேஸ்வரி கிராபிக்ஸ், சென்னை. |

வெளியீடு

**உலகத் தமிழர் தேசியத் தமிழியக்கக் கல்விக் கழகம்**

**The World Tamils National Institute of Tamil Movement**

தமிழைக்
கை கழுவினர்
தமிழகத்
தலைவர்கள்

தமிழ்க் கல்வியை
வளர்க்கத்
தமிழமைப்புக்கள்
தமிழார்வலர்கள்
தமிழாசிரியர்கள்
முன்வருக !

தமிழ் உணர்வு
மட்டும் போதாது
தமிழ்க்கல்வி
வேண்டும்
தமிழிலக்கிய
அறிமுகம் வேண்டும்

தமிழுடன்
பழகுவோம்
தமிழராய்
வாழ்வோம் !

## தாங்குவாரின்றித் தவிக்கும்தமிழ்

தமிழ் மொழி மழலையர் முதல் கற்கப்படவில்லை. தமிழ்ப்பாடம் இன்றி, இந்தி சமற்கிருதம் பிரெஞ்சு மொழிகளைப் பாடமாகப் படித்து, பட்டப் படிப்பு வரை முடிக்கலாம். இவ்வாய்ப்பை, ஓர் அரசாணை மூலம் தந்து, 1968 முதல் இன்றுவரை, மாநில மக்களின் தாய்மொழியை இம் மாநில மக்களே புறக்கணிக்க வழிவகுத்த ஒரே ஒரு இந்திய மாநிலம் தமிழகமே!

'தமிழ்வாழ்க' என்று, அரியணை ஏறிய இயக்கமே, இவ் விழிநிலையைத் தோற்றுவித்துக் காத்து, இன்றுவரை நிலைநிறுத்தி வருகிறது. 'தமிழ் வாழ்க' என முழக்கமிட்டுக் கொண்டே, மெட்ரிகுலேசன், நர்சரிப் பள்ளிகளைக் கணக்கின்றித் திறக்க வழிவகுத்ததும் இந்த இயக்கமே. ஒரு மொழியைப் புறத்தே வாழ்த்திக்கொண்டே அதன் அழிவிற்கான அனைத்தையும் செய்த 'பெருமைக்' குரியது அது. இன்றும் அரசியல் தலைவர் முதல், அடிமட்டத்தொண்டர்வரை அனைவரும் மேடை ஏறினால் பார்க்க வேண்டுமே, உணர்ச்சிக் கொந்தளிப்பை!

தமிழரனைவரும் ஒரே மாதிரியாக உள்ளோம். பதவி, பணம், பவிசு - ஆட்டிப் படைக்கின்றன. தன்னலத்திற்காகத் தன்மானத்தை விலைபேசும் நம்மைவிட மோப்பம் பிடித்துத் தெருவில் திரிபவை மேலானவை; நன்றியுள்ளவை.

தமிழகம்போல் கருநாடகத்திலும் ஆங்கில மோகம் தலைவிரித்தாடியது. ஆங்கில வழிப் பள்ளிகளும் பெற்றோர் சங்கங்களும் வழக்குத் தொடுத்தன; உச்சநீதிமன்றம் வரை சென்றன. ஆனால் கருநாடக அரசு, ஒரே குறிக்கோளுடன், திறமையுடன் வாதாடி, வழக்கை வென்றது.

**'ஒரு மாநில அரசு தெளிவான மொழிக் கொள்கையை வகுத்துச் செயற்படுத்தும்போது, அதில் நீதிமன்றங்கள் தலையிடக் கூடாது'** - என்ற நல்ல தீர்ப்பைப் பெற்றது. 'மக்கள் விரும்புகிறார்கள்; என்ன செய்வது?' என்று அங்குள்ள அரசு தாய்மொழியைக் கைவிடவில்லை. அவர்களை ஆளும் அரசுகள் தம் ஆளுமையால் நல்வழிப்படுத்தின.

நடுவணரசுப் பள்ளிகள், ஆங்கிலவழிப் பள்ளிகள் உட்பட மழலையர் முதல், நான்காம் வகுப்புவரை கன்னடமே பாடமொழி, பயிற்றுமொழி என அங்குள்ள அரசு நடைமுறைப் படுத்தியது. இப்போது 2002 கல்வியாண்டு முதல் ஐந்தாம் வகுப்பிலும் கன்னடமே பயிற்றுமொழிஎன ஓர் அவசர அரசாணை பிறப்பித்து, அனைத்துப் பள்ளிகளையும் 'கிடுக்கிப் பிடியில்' அகப்படுத்தியது.

சென்ற ஆண்டு அங்கே ஒரு வல்லுநர்குழு அமைக்கப்பட்டது. அக்குழு ஏழாம் வகுப்புவரை கன்னடமொழியே பயிற்றுமொழியாதல் வேண்டுமெனப் பரிந்துரைத்துளது. அப்பரிந்துரைப்படி, இந்த ஆண்டு ஐந்தாம் வகுப்புக்கு முன்னேறியுள்ளனர். இது பற்றி, ஞானபீடப்பரிசு பெற்ற ஆங்கிலப் பேராசிரியர் யு.ஆர். அனந்தமூர்த்தியிடம் கேட்டபோது, ''அதுதானே முறை; ஆங்கிலத்தை ஒருமொழிப் பாடமாகக் கற்றால் போதாதா?'' என்று திரும்பக் கேட்கின்றார். ஓரளவு ஆங்கிலங் கற்றதால் பேரறிவாளர்கள் எனத் தம்மைத் தாமே எண்ணித்திரியும் இங்குள்ள கல்வியாளர்கள் முகத்தில் காறி உமிழ்வது போல் இவ்விடை உளது.

ஆங்கிலத்தை ஒருமொழிப் பாடமாகக் கற்றவர்கள் எல்லாம், மிகத் திறமையாக ஆங்கிலம் பேசுகிறார்கள். இங்குள்ள நம் தமிழகத் தலைவர்களுக்கோ - பெரும்பாலானவர்க்கு - ஆங்கிலமும் வராது; இந்தியும் தெரியாது; தமிழையும் கைவிட்டனர்.

காவிரியில் தண்ணீர் விடுவது முதல் கன்னட மொழிக்கல்விவரை, அங்கு கட்சி வேறுபாடே கிடையாது. இங்கு முற்போக்குக் கட்சிகள் முடங்கிப்போயின; அனைத்திந்தியக் கட்சிகள், சுயசிந்தனை - சுயமரியாதை - தன்மானம் அனைத்தையும் துறந்து, 'மேலிட உத்தரவுக்காகவே' அன்றும் இன்றும் காத்துக் கிடக்கின்றன. அவசரமான இயற்கை அழைப்புக்குக் கூட, இவை மேலிட உத்தரவு வரும்வரை பொறுத்திருப்பதே கட்சிக்கு நன்றி காட்டுவதாக நினைக்கின்றன. கருநாடகத்தில் இந்த இழிநிலை காணப்படவில்லை.

அனைத்திந்தியக் கட்சிகள் எல்லாமே தமிழுக்குக் குரல் கொடுப்பதில்லை. அவ்வாறு குரல் கொடுத்தால் 'சர்வ தேசியம்' போய்விடுமாம். இந்தியத் தேசியத்திற்கு எதிராகி விடுமாம். **தமிழ்த் தேசியம் இந்தியத் தேசியத்திற்குள் ஒன்று. இந்தியா பல தேசிய இனங்கள், சமயங்கள் கொண்ட ஒரு துணைக் கண்டம். ஒன்றை ஒன்று காத்து, அரவணைத்து இந்தியத் தேசியத்தைக் காப்பாற்ற வேண்டும்.**

**ஒன்றை ஒன்று மறைமுகமாக அழிக்க முயல்வது கூட, பாரத நாட்டுக்கு நல்லதன்று.**

தாய்த் தமிழகமே தடுமாறிப் போனதால், தமிழ் வழங்கும் உலக நாடுகளில் தமிழ் மதிப்பிழந்து வருகிறது.

தமிழைக் கல்விமொழியாக்கவும், தமிழறிவு பழுதுபடாமல் காக்கவும் இந் நூல்வரிசைகள் வெளியிடப்படுகின்றன. எளிய பணி இது; ஆனாலும் இனிய பணி. தமிழாசிரியர்கள், தமிழமைப்புக்கள், தமிழார்வலர்கள் இவ்வரிசை நூல்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு, மகளிருக்கு இந்நூல்களைத் தரலாம். பாடமாக்கலாம்; இவற்றில் போட்டிகள் வைக்கலாம்; வென்றவர்க்குப் பட்டம், பரிசு, பொற்கிழி தரலாம்.

*மக்களிடமும் மாணவர்களிடமும் செல்வோமாக !*

*தமிழண்ணல்*
தமிழ்அடிசூடி

தமிழ் மக்களை
விழிப்படையச் செய்யவேண்டும்
தமிழக மாணவர்களைத்
தமிழின்பால் ஈர்க்கவேண்டும்!

நம்மிடம் தமிழுணர்வு இருக்கிறது. உணர்வு மேடை ஏறிப்பேசப் பயன்படுகிறது. பேசிப்பேசி வெற்றி பெற்றோமில்லை. தமிழில் பேச்சுத்தொழில் வல்லுநர்களை மட்டுமே வளர்த்து வருகிறோம் நாம்.

தமிழ்வழிக் கல்வி மழலையர்முதல் ஐந்தாம் வகுப்பு வரையாவது வேண்டுமென வற்புறுத்துவதில்லை. களம் இறங்கிப் போராடுவதில்லை.

தமிழுக்கு மந்திரசக்தி உண்டு. தமிழ்வழிபாட்டால் அனைத்து நலங்களும் எல்லாச் செல்வங்களும் பெறலாம் என வலியுறுத்தி, மக்கள் தமிழிலேயே எல்லாச் சடங்குகளையும் செய்யுமாறு நம்பிக்கையூட்டுவதில்லை. நாமே செய்து காட்டுவதில்லை.

தமிழை அவமதிப்பவர்களை, தமிழில் வழிபாடு செய்தால் தீட்டுப்படும், அது 'நீசபாஷை' என்று சொல்லிக் கொண்டு, இந்தத் தமிழ் மண்ணிலேயே சீரும் சிறப்பும் பெற்று வாழ்பவர்களைக் கண்டுகொள்வதில்லை; கண்டிப்பதுமில்லை.

தமிழமைப்புக்கள் கழகம், மன்றம், சங்கம் எனப் பல ஆயிரம் அமைப்புக்கள் உள்ளன. இவை மேற்கூறிய எதனைப் பற்றியும் கருத்திற் கொள்வதில்லை.

எனவேதான் 'மக்களியக்கமாக' மாற்ற வாருங்கள். மாணவர், இளையோர் அணிவகுப்பை அமைக்க உதவுங்கள். தமிழர்களே எனத் தமிழமைப்புக்கள், தமிழாசிரியர்கள், பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் அனைவரையும் எமது தமிழியக்கக் கல்விக் கழகத்தில் - கட்டணமின்றி - உறுப்பினராகித் தொடர்புகொள்ள அழைக்கின்றேன்.

தமிழண்ணல்

*தமிழடிகுடி*

## சுவை தரும் சொற்கள்


1. ஊர்
2. ஊர் - இறுதி ஒட்டு
3. அறைகூவல்
4. அறைபோதல்
5. கீழறுத்தல்
6. விளம்புதல்
7. விளம்பரம்
8. கணியம்
9. கணியரும் வேதியரும்
10. கலைகள் தமிழ்நாட்டில்; நூல்கள் வடமொழியில்
11. தமிழ் அந்தணர் தமிழரே
12. ஏழரையாட்டைச் சனி
13. யாட்டை-யாண்டு-ஆண்டு
14. வருடை - வருடம்
15. மாதம்
16. தமிழரின் வானியல் அறிவு
17. பக்கம்-மதியத்தின் இருபக்கம்
18. நிறைமதியும் குறைமதியும்
19. கூர்தல்
20. வளி
21. அமர்க்களம்
22. குறுக்குச்சால்
23. களேபரம்
24. சேய்மை
25. கம்பலை
26. சமையம்
27. அடிசில்
28. தண்டமும் தண்டனையும்
29. சாரியும் சாரையும்
30. வியும் சமயம்
31. மட்டந்தட்டுதல்
32. பூசிமெழுகுவது
33. மழுப்புதல்
34. கட்டாயம்
35. தூற்றுதல்
36. மலைஏற்றுதல்
37. கட்டவிழ்த்து விடுதல்
38. சரமாரி
39. கொட்டம்
40. இசைக்கலை பயிலாத இசைக்கலைஞர்கள்
41. செலவில்லாமல் காதுகுத்துவது
42. கடலோடிகளின் முன்னோடிகள்
43. ஏற்றுமதியான நாகரிகம்
44. கயிறு திரிப்பது
45. கணக்கு வழக்கு
46. முல்லைமாறி
47. பெட்டி
48. சோமாறி
49. பரியும் புரவியும்
50. குட்டு வெளிப்படுகிறது
51. குட்டுணி யார்?
52. குட்டு : மானமும் மறைபொருளும்
53. குட்டம் - குட்டை - குட்டு
54. ஐம்பொறியும் ஐம்புலனும்
55. புலன் விசாரிக்கப்படுகிறது
56. துப்பு - விளக்கப்படுகிறது
57. துப்புரவு - பொருள்வளர்ச்சி
58. துப்பு துலக்கப்படுகிறது
59. அடர்த்தி
60. உயிர்

*வெல்க தமிழ்!*

*அல்லவை தேயட்டும், அறம் வளரட்டும்!*

*அறப்போர் அணிவகுப்போம் வாரீர்*

*அமைதிப் புரட்சிக்கு வித்திடுவோம் வாரீர் !*

அன்பழைப்பு விடுப்பவர்

**தமிழண்ணல்,** ஒருங்கிணைப்பாளர், தமிழ்ச்சான்றோர் பேரவை. தலைமை இயக்குநர், தமிழியக்கக் கல்விக் கழகம், ஏரகம், 4/585, சதாசிவ நகர் முதன்மைச்சாலை, மதுரை 625 020.

**அல்லவை தேய அறம் பெருகும்** என்றார் திருவள்ளுவர்.

இதன்பொருளென்ன?

அறம் பெருகப் பெருகவே அல்லவை தேயும்; ஒழியும். ஒளி பரவப்பரவவே இருள் விலகும்; மறையும்.

இதுகாறும்

தமிழுக்குப் பகையாயினவற்றைப் பேசிப்பேசியே பொழுதைக் கழித்துவிட்டோம்.

இனியாவது,

1. தமிழ்க் கல்வியை, தமிழ் இலக்கணத்தை எளிமைப்படுத்துவோம்; இனிமைப் படுத்துவோம்.
2. தமிழ் இலக்கியச் சிறப்புக்களை, சிறுசிறு நூல்கள் மூலம் தமிழிலும் ஆங்கிலத்திலும்

தந்து மக்களிடையே, மாணவரிடையே பரப்புவோம்.

3. நம் தமிழக மன்னர்கள் கரிகாலன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேர மாமன்னன் செங்குட்டுவன், முதற்பெருங் காப்பியம் படைத்த 'அந்தமில் உலகத்து அரசாள் வேந்து' இளங்கோவடிகள், பாண்டியன் அறிவுடை நம்பி, இராசராசன், இராசேந்திரன் போலும் மாமன்னர் பற்றிச் சிறுசிறு நூல் எழுதி மக்கள் அறியச் செய்வோம். அவர்கள் தமிழினத்தையும் தமிழையும் காத்த நெறிமுறைகளை உலகறிய எழுதிப் பரப்புவோம்.

4. சங்க காலம் முதல் தமிழகத்தில் நடந்த வரலாற்றுக் கதைகள் - பாரி வள்ளல், கோப்பெருஞ்சோழன், அதியமான் போலப் பிள்ளைகளுக்கு நினைவூட்ட வேண்டிய நம் சொந்தக் கதைகளை எழுதிப் பரப்புவோம். இராமாயண, பாரதம் பரவியுள்ளதே தவிர, நம் பெரிய புராணம் முதல் சங்க காலக் கதைகள் - தமிழுக்கு உயிர்கொடுத்த மன்னன் கதை - ஆராய்ச்சி மணி அமைத்த தமிழ் மனுநீதிச் சோழன் கதை, ஆட்டனத்தி ஆதிமந்தி காதற்கதை, அன்னி மிஞிலிகதை - எண்ணினால் எத்தனையோ வரலாற்றுக் கதைகள் - இவற்றை நம் மக்களிடம் பரப்ப வாருங்கள் தமிழர்களே!

5. தமிழன்னை போற்றித் திருஅகவல் [ஒளி வழிபாடு, திருவிளக்குப் பூசை], கண்ணகி நோன்பு [போற்றி, விரதம்] காரைக்காலம்மை மலர் வழிபாடு, வள்ளுவர் ஒளி வணக்கம், மங்கையர்க்கரசியார் தமிழ் நோன்பு, மணிமேகலை வழிபாடு, தவறெனக் கண்டதும் உடனுயிர் நீத்த பாண்டியன், தேவி வழிபாடு, மனுநீதிச் சோழன் பற்றிய ஒருநாள் விரதம் – உண்ணா நோன்பு – என இத்தகைய நோன்புகளை, திருவிளக்குப் பூசைகளை, மலர் வழிபாடுகளை, விரதங்களை, வணக்கங்களை மகளிரிடம், மக்களிடம் பரப்ப வழிகாட்டுகிறோம்! வாருங்கள் தமிழர்களே! தமிழ்த் தடத்தில் நடை பயில்வோம் என அன்புடன் அழைக்கின்றோம்.

6. தமிழர்களே தமிழைப் புறக்கணிக்கிறார்கள். இம்மனப் போக்கை மாற்ற வேண்டும். தமிழில் வழிபட்டால்தான் செல்வம் பெருகும்; குடி தழைக்கும்; இன்பம் உண்டாகும்; துன்பம் விலகும். தமிழ் மந்திரங்களைத் திருமுறை – சங்க நூல்கள் – புதியவை எனப் பத்துப் பத்துப் பாடல்களாக, சிறுசிறு நூல்களாக வெளியிட்டுப் பரப்பி மக்களைப் படிக்க வைப்போம். போட்டிகள் வைப்போம். பரிசு, பட்டம் தருவோம்.

7. கயல் மலர் அழகு தேன் கனி யாழினி சாலி – இத்தகைய தமிழ்ப்பெயர்கள் ஆயிரம் உள. அருள் அறம் அரசு எழில் அருண் மாறன்

மணியன் செழியன் இத்தகைய பெயர்களும் ஆயிரம் உள. ஆனால் எந்த ஒரு தமிழனும் தமிழில் பெயரிடக் கூசுகிறானே? இதை மாற்றுவோம். பொன்னான உள்ளம் படைத்த புதுமைத் தமிழுலகே! புறப்படு! எழுச்சிக் கீற்று தமிழக வானில் எழட்டும்!

8. வெளிநாடு வாழும் நம் தமிழ்க் குழந்தைகளுக்கும் பாழாய்ப்போன தமிழக அரசுகளால், தமிழை அறவே புறக்கணித்துவிட்ட தமிழ்நாடு வாழும் நம் தமிழ்க் குழந்தைகளுக்கும் ஆங்கிலவழி மூலமாகவும் எளிய இனிய தமிழ் வழியிலும் சிறுசிறு நூல்கள் எழுதிப் பரப்பிப் பயில வைத்துத் தமிழனைத் தமிழனாக அடையாளப் படுத்துவோம்.

9. சிவனியம், மாலியம் இரண்டும் தமிழர் சமயங்கள். இத்திருக்கோயில் வழிபாடுகளை இயன்றவரை தமிழ்மைப்படுத்தி, தமிழ்வழி அருச்சகப் பயிற்சி தந்து, புதிய முறையில், தமிழ்ப் பண்பாட்டு அடிப்படையில் அனைத்து வழிபாடுகளும் நடக்கக் கையேடுகள் உருவாக்குவோம்; பயிற்சி தருவோம்; நடைமுறைப் படுத்துவோம்.

10. தமிழுக்கு மாறான – பகையான அனைத்தையும் புறக்கணிப்போம். மேலே சுட்டிய ஆக்கமான பணிகள் அனைத்தையும் செய்ய நாங்கள் வழிகாட்டுகிறோம். தொடர்பு கொள்ளுங்கள்; ஒத்துழைப்புத் தாருங்கள்; இன்சொல் காட்டி மடல் எழுதுங்கள். எழுச்சிக்கு வழிவகுக்க எழுக, வருக, செயற்படுக!

# சொல் புதிது சுவை புதிது

## 1. ஊர்

பயன்மரம் உள்ஊர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின் 216

யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு 397

ஊர் என்பது அடிப்பட்ட, தொன்றுதொட்டு வருகின்ற தமிழ்ச் சொல். யாரும் மறுத்தற்கு இயலாதது. காரணம் கருதித் தோன்றிய சொல் அது.

மக்கள் இடம்விட்டு இடம் ஊர்ந்து சென்று குடியிருந்த காலந்தொட்டு வழங்கிவரும் பெயர். மானுடப் பண்பாட்டின்படி இடம்பெயர்ந்து வாழ்வதே பழக்கமாயிருந்த காலத்தே தோன்றியது.

ஊர், ஊரவர், ஊரன் எனவரும்.

ஊரும், ஊர்தல், ஊர்ந்தனர், ஊர்கிறது, ஊர்வன எனவரும். ஊர்தி - ஊரப் பயன்படும் வாகனம்.

மதுரை மூதூர், வஞ்சிஊர், உறையூர் எனத் தலைநகரங்களே வழங்கின. 'ஊரெனப் படுவது உறையூர்' என்பர்.

மருதநிலத்தலைவன் 'ஊரன்' எனப்பட்டான். சிலப்பதிகாரத்தில் வரும் ஊர்காண் காதை, கோவலன்

முதன்முதல் மதுரைக்குள் நுழைந்து சுற்றிப் பார்த்ததைக் குறிக்கிறது. மருதநில வளம்நிறைந்ததே 'ஊர்' எனப்பட்டது.

ஊர்வலம், நகர்வலம் பார்க்க இனிது. வழக்கில் ஊர் கோலம் என்பது விழாக்கோலமே. 'விழவறா மூதூர்' எனச் சங்கப்பாடல்களில் அடிக்கடிவரும்.

எறும்பு ஊரக் கற்குழியும்; **உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடமுடியுமா** - பழமொழிகள். கட்டூர் - போரிடும்போது, அயல்நாட்டில் தங்குவதற்காக, இடை ஏற்பாடாகக் கட்டிக் கொள்ளும் பாசறையைக் 'கட்டூர்' என்பர். '**மரந்தலை தோன்றா ஊரரும் அல்லர்**' என்ற தொடர் ஊர்கள் நெருக்கமாய் இருந்ததைக் காட்டும். *(குறு. 203)*

'ஓரூர் வாழினும் சேரி வாரார், சேரி வரினும் ஆரமுயங்கார்' *(குறு. 231)* என்பது, பல சேரிகள் கொண்டது ஓர் ஊரென விளக்குகிறது.

'ஊர்' என்பது உலகெலாம் பரவி இன்றும் வாழும் தமிழ்ச்சொல்.

**"Well, we do know that Abraham (B.C. 2000) Came from Ur, and how many Urs do we find in Tamilnadu meaning "township?' (Hephzibah Jesudasan, Count down from Solomon, Institute of Asian Studies, Chennai, 1999)**

## 2. ஊர் - இறுதிஒட்டு

தமிழில் ஆயிரக்கணக்கான இடங்களில் கருவூர், பேரூர், மேலூர் என இவ்வாறு ஆளப்படும் 'ஊர்', உலகெங்கும் இறுதி ஒட்டாக இருப்பது ஆராயத்தக்கது.

திருச்சூர், மைசூர், ஜெய்ப்பூர், உதயப்பூர், துர்க்காபூர், கான்பூர் - பாரதநாடு முழுதும் உள்ள ஊர் ஒட்டிய பெயர்களை எண்ணினால், இந்திய நாடு ஒருகாலத்தில் தமிழ் பேசும் தமிழகமாகவே இருந்தமை பெறப்படும்.

சிங்கப்பூர் தமிழனிட்ட பெயர். இன்று அதன் வரலாற்றில் 'சிங்கபுரா' என்பதே சிங்கப்பூர் என மருவியதாகப் பச்சைப் பொய்யை எழுதி, உள்ளூள் மகிழ்கிறார்கள். ஆங்கிலத்திலும் Singapore என்றே உளது. சிங்கபுரா எப்படி ஊராக மாறுமோ, அறியோம். சமற்கிருதப் பிரியர்கள் உலகம் முழுதும் இந்தத் 'தகிடுதத்தம்' செய்வதில் இடைவிடா முயற்சியுடையவர்கள். அவர்களையும் மீறி உலகெங்கும் இருக்கும் ஊர்களைப் பட்டியலிட்டால், அவர்களே வியப்பிலாழ்ந்து, வேதனையில் வீழ்வார்கள்.

நமக்குத்தான் சூடுசுரணை இல்லையே?

**'யாதும் ஊரே, யாவரும் கேளிர்'** - என்று பாடிவிட்டு உலகெங்கும் உள்ள ஊர்ப்பெயர்கள் - 'ஊர்' ஒட்டுடையவை தமிழன் உலகெங்கும் பரவி வாழ்ந்ததைக் காட்டுமென முழங்கிவிட்டு, உறங்கப் போய்விட்டால் நல்லதுதானே? 'ஊர் துஞ்சும் யாமமும்' என்பான் சங்கப்புலவன். தமிழர்கள் பகலிலும் விழித்துக் கொண்டே உறங்குபவர்கள். ஊர்க்காலி, மோப்பநாய், சண்டி எருமை என்பன தமிழர்களுக்கு மிகவும் பொருந்தும் என்பர். ஊருடன் ஒத்துவாழ், ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும். நமக்கேன் வம்பு? விட்டுத்தள்ளுங்கள். நீரோ என்ற மன்னனைப் போல, 'ஊரே' கொள்ளை போனாலும், யாழ்மீட்டி இன்புறலாம் என்றால், யாழையுமல்லவா இழந்துள்ளோம்?

மானங்கெட்ட தமிழனைப்போல, ஈனமுற்றவன் உலகில் வேறு எங்குமே இல்லை எனலாம்.

## 3. அறைகூவல்

முன்பு போர்க்களத்தில் அறைகூவுவது வலிமை, மறம், வீரத்தின் அடையாளம். 'உன்னைக் கொல்லாது விடேன்; கை கால்களை அறுத்து - வெட்டி வீழ்த்துவேன்' என்று வீர உரை பகர்வது அது. தன் வலிமை தோன்ற எதிரியைப் போருக்கு அழைப்பதால், ஓங்கி ஒலிக்கும் அதைக் 'கூவுதல்' என்றனர். இன்று 'சவால்' விடுவதாகச் சொல்வதுடன் ஒருபுடை ஒத்தது இது.

இன்று அரசியல்வாதிகள் அறைகூவுகிறார்கள். 'வரும் தேர்தலில், உங்கள் கட்சியை விரட்டி அடிப்போம்' என்று அறைகூவுவார்கள். தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு 'அறைகூவல்' விடுத்து நிறுவனத்தைப் பணியவைக்க முயல்வார்கள். குடிகாரக் கணவன் 'உன்னை என்ன செய்கிறேன் பார்!' என்று மனைவியிடம் அறைகூவுவது, ஊராரின் நகைப்பிற்கு இடமாகும்.

## 4. அறைபோதல்

அறைபோதல் என்பது பிறரது வஞ்சனைக்கு ஆளாவது. அறைபோதல் - அற்றுப் போதல். 'அறிவு அறைபோகிய பொறி அறு நெஞ்சத்து' மன்னனே எனக் கண்ணகி சீறினாள் (சிலம்பு : 20-25). அறிவு அற்றுப்போனது என்று பொருள். ஐம்பொறிகள் பழுதாகிப் போவதைக் கண்ணறை, செவியறை,

மூக்கறை என இவ்வாறு அழைப்பர். இன்று தன்மானம் இழந்து, தமிழ்ப் பகைகளின் காலடிகளில் வீழ்ந்து, எழுந்திருக்க முடியாமல் திண்டாடும் மேதைகளை 'மூக்கறை' எனலாம். ஒருவனை 'போடா, மூக்கறை' எனத் திட்டுவது அவனை அவமானப்படுத்துவதாகும். 'மூக்கறுபட்டான்' என்பதில்லையா? ஒரு மரபுத் தொடர் இது. அதிலிருந்து அங்ஙனம் அவமானப் பட்டவனை 'மூக்கறை' எனக் குறிக்கும் வழக்கமும் தோன்றியுளது.

இதுபற்றி ஒரு கதையும் உண்டு. ஒரு முட்டாளைப் பார்த்து, மற்றொருவன், 'மூக்கை அரிந்துகொண்டு, மேலே பார்த்தால் 'சொர்க்க உலகம்' தெரியும் என்றான். அவனும் அவ்வாறே அரிந்து கொண்டான். சொன்னது போல மேலுலகம் தெரியவில்லை. அவனோ முழுமுட்டாள் அல்லன். அதனால், ''அடடே! அதோ சொர்க்கம் தெரிகிறதே; ஊர்வசி போகிறாள்; காமதேனு வருகிறது!'' என்று உண்மையில் எல்லாவற்றையும் கண்டவன்போல், பரவசப்பட்டுப் பேசினான். அதனை நம்பி ஊரிலுள்ள அனைவரும் ஒருவனைப் பார்த்து ஒருவன் மூக்கை அறுத்துக் கொண்டார்களாம். இதுதான் கதை. தமிழர்களில் 75 விழுக்காட்டினர் படித்த கல்வியாளர் முதல் அரசியல் தலைவர்வரை இத்தகைய மூக்கறைகளாகவே விளங்குவது தமிழரின் தனிச் சிறப்பாகும்.

இதிலிருந்துதான் 'அறைகூவல்' வந்தது. இந்தப் பாழ்பட்ட தமிழர்களைத் திருத்தி, தமிழகத்தில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்குவேன் என அறைகூவவல்ல இளைஞர்கள் அணிதிரள வேண்டும்.

## 5. கீழறுத்தல்

அறைபோதல் போலக் கீழறுத்தல் என்பதும் ஒரு மரபுத் தொடராகும். 'அறைபோகு அமைச்சர்' முதலான பொய் கூறி வாழ்வோரைக் காவிரிப்பூம் பட்டினத்தில் பூத சதுக்கம் பாசக் கயிற்றால் இழுத்துத் தரையில் புடைத்துக் கொல்லும் என்பது சிலப்பதிகாரம். அறைபோகு அமைச்சர் - கீழறுத்தல் செய்யும் அமைச்சர். வஞ்சனையாக, மறைந்து கெடுதல் செய்தல் இது.

குயவன், மரத்தச்சன் யாவரும் கீழறுத்தலில் வல்லவர்கள். அவர்கள் அறுப்பது வெளியே தெரியாது. ஆனால் அறுபடும் வேலை, கீழே நடக்கும். அவர்கள் தொழில் முறைஅது.

அதுபோல உடன் இருந்துகொண்டே உட்பகையாக வஞ்சகமாக அழிவு வேலை செய்பவர்களைக் 'கீழறுத்தல்' செய்பவர் என்பர். **தமிழ் மொழிக்கு மட்டும் இப்படிக் 'கீழறுத்தல்' செய்வோர் பலர் உள்ளனர்.** 'அறைபோகு அமைச்சர்கள்' போல, இவர்கள் உயர்ந்த நிலைகளிலிருந்து அதாவது மடப்பீடாதிபதிகளாக, திரைப்படம் தொலைக்காட்சி நாளேடு பருவ இதழ்கள் அனைய ஊடகப் பேர்வழிகளாக, அரசு அதிகாரிகளாக இருந்துகொண்டு, தமிழ்மொழிக்கும் இனத்துக்கும் கீழறுத்தல் வேலை செய்தவண்ணம் உள்ளனர். காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த பூதசதுக்கம் இருந்தால், இவர்களை அப்போதைக்கு அப்போது புடைத்து உண்ணும். அக்கற்பனை உண்மையாக வேண்டுமென்று இறையருளை வேண்டுவோமாக! இதுவும் உடனடியாகத்

தமிழக நகரங்களில் எல்லாம் உண்மையான பூதசதுக்கங்களை அமைக்க இன்றே முயலவேண்டும்.

## 6. விளம்புதல்

தமிழில் வாயாற் சொல்லுதலுக்குக் கூறுதல், மொழிதல், பகர்தல், கழறுதல், கதைத்தல், உரைத்தல், பன்னுதல், விளம்புதல் என நாற்பதுக்கு மேற்பட்ட சொற்கள், தனித்தனி நிழற்பொருளுடன் இருப்பதை மொழி ஞாயிறு பாவாணர் எடுத்துக்காட்டியுள்ளார்.

அவற்றுள் ஒன்று விளம்புதல்.

''குழந்தையாய் இருந்தபோது என் சுட்டுவிரலைப் பிடித்து வெள்ளை வெளேரென்ற மணல் முற்றத்தில் 'ஆனா' எழுதப் பழக்கினாள் அம்மா'.

'தமிழனா தமிங்கிலனா' என்ற தமது நூலை, உணர்ச்சிப் பாவலர் வேந்தன் காசி ஆனந்தன் இவ்வாறு தொடங்குவார். பாவேந்தனுக்குப் பிறகு வந்த பாவலர் வேந்தன் இவரே. இவரது பாக்களைப் படியுங்கள். தமிழனைக் கவ்வியிருக்கும் இருளை எரிக்கும் நெருப்புக் கோளங்கள் அவை!

நான் 'அ, ஆ' ... 'இ, ஈ' என வாயாலும் விளம்பி, மணலிலும் கோட்டின் மேலேயே விளம்பித் திண்ணைப் பள்ளியில் படித்தவனே. காலையில் பள்ளி தொடங்கியதும் 'முறை வைப்பது' என்று இதற்குப் பெயர். 'ஓரோன் ஒன்று'; 'ஈரிரண்டு நான்கு'; 'மும்மூன்று ஒன்பது' என வாய்பாடுகளையும் முறைவைத்து, அனைவரும் ஒரே குரலில், குழுப்

## 5. கீழறுத்தல்

அறைபோதல் போலக் கீழறுத்தல் என்பதும் ஒரு மரபுத் தொடராகும். 'அறைபோகு அமைச்சர்' முதலான பொய் கூறி வாழ்வோரைக் காவிரிப்பூம் பட்டினத்தில் பூத சதுக்கம் பாசக் கயிற்றால் இழுத்துத் தரையில் புடைத்துக் கொல்லும் என்பது சிலப்பதிகாரம். அறைபோகு அமைச்சர் - கீழறுத்தல் செய்யும் அமைச்சர். வஞ்சனையாக, மறைந்து கெடுதல் செய்தல் இது.

குயவன், மரத்தச்சன் யாவரும் கீழறுத்தலில் வல்லவர்கள். அவர்கள் அறுப்பது வெளியே தெரியாது. ஆனால் அறுபடும் வேலை, கீழே நடக்கும். அவர்கள் தொழில் முறைஅது.

அதுபோல உடன்இருந்துகொண்டே உட்பகையாக வஞ்சகமாக அழிவு வேலை செய்பவர்களைக் 'கீழறுத்தல்' செய்பவர் என்பர். **தமிழ் மொழிக்கு மட்டும் இப்படிக் 'கீழறுத்தல்' செய்வோர் பலர் உள்ளனர்.** 'அறைபோகு அமைச்சர்கள்' போல, இவர்கள் உயர்ந்த நிலைகளிலிருந்து அதாவது மடப்பீடாதிபதிகளாக, திரைப்படம் தொலைக்காட்சி நாளேடு பருவ இதழ்கள் அனைய ஊடகப் பேர்வழிகளாக, அரசு அதிகாரிகளாக இருந்துகொண்டு, தமிழ்மொழிக்கும் இனத்துக்கும் கீழறுத்தல் வேலை செய்தவண்ணம் உள்ளனர். காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த பூதசதுக்கம் இருந்தால், இவர்களை அப்போதைக்கு அப்போது புடைத்து உண்ணும். அக்கற்பனை உண்மையாக வேண்டுமென்று இறையருளை வேண்டுவோமாக! இதுவும் உடனடியாகத்

தமிழக நகரங்களில் எல்லாம் உண்மையான பூதசதுக்கங்களை அமைக்க இன்றே முயலவேண்டும்.

## 6. விளம்புதல்

தமிழில் வாயாற் சொல்லுதலுக்குக் கூறுதல், மொழிதல், பகர்தல், கழறுதல், கதைத்தல், உரைத்தல், பன்னுதல், விளம்புதல் என நாற்பதுக்கு மேற்பட்ட சொற்கள், தனித்தனி நிழற்பொருளுடன் இருப்பதை மொழி ஞாயிறு பாவாணர் எடுத்துக்காட்டியுள்ளார்.

அவற்றுள் ஒன்று விளம்புதல்.

''குழந்தையாய் இருந்தபோது என் சுட்டுவிரலைப் பிடித்து வெள்ளை வெளேரென்ற மணல் முற்றத்தில் 'ஆனா' எழுதப் பழக்கினாள் அம்மா'.

'தமிழனா தமிங்கிலனா' என்ற தமது நூலை, உணர்ச்சிப் பாவலர் வேந்தன் காசி ஆனந்தன் இவ்வாறு தொடங்குவார். பாவேந்தனுக்குப் பிறகு வந்த பாவலர் வேந்தன் இவரே. இவரது பாக்களைப் படியுங்கள். தமிழனைக் கவ்வியிருக்கும் இருளை எரிக்கும் நெருப்புக் கோளங்கள் அவை!

நான் 'அ, ஆ' ... 'இ, ஈ' என வாயாலும் விளம்பி, மணலிலும் கோட்டின் மேலேயே விளம்பித் திண்ணைப் பள்ளியில் படித்தவனே. காலையில் பள்ளி தொடங்கியதும் 'முறை வைப்பது' என்று இதற்குப் பெயர். 'ஓரோன் ஒன்று'; 'ஈரிரண்டு நான்கு'; 'மும்மூன்று ஒன்பது' என வாய்பாடுகளையும் முறைவைத்து, அனைவரும் ஒரே குரலில், குழுப்

பாடல்போல் ஒப்பிக்கவேண்டும். தமிழ் கண்ணாலும் செவியாலும் கைவிரலாலும் உணரப்பட்டுத் தாயுடன் சேய்போல் பழகிய காலம் அது.

ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லுதலையே விளம்புதல் என்பர். மணலிலும் சரி, சுவடியிலும் சரி ஒன்றன்மேல் திரும்பத் திரும்பக் கோடு இழுத்து, எழுத்துக்களை அறிவதையும் விளம்புதல் என்பர்.

'சாம்பாரை விளம்பு' என்பதுண்டு. தமிழைத் தமக்கு அன்னியமாகவே நினைத்து, நன்றி மறக்கும் சிலரது வட்டார வழக்கு இது. சாப்பாட்டில் விளம்புதல் என்றால் குழம்பு, மிளகுச்சாறு, மோர் இவற்றைப் பரிமாறுதல். இவற்றை ஒருமுறை ஊற்றினால் போதாது. நன்கு சோர விளம்பவேண்டும்.

ஒருவர் ஒருசெய்தியைத் திரும்பத் திரும்பப் பேசினால், 'ஏன் அம்மா விளம்புகிறாய்' எனக் கேட்பர். விளம்புதல் - விளக்கமாகச் சொல்லுதல்; திரும்பத் திரும்பச் சொல்லுதல். தொடர்வண்டி, விமான நிலையங்களில் புறப்படும் நேரம் சேரும் நேரங்களைத் திரும்பத் திரும்ப ஒலிபெருக்கியில் விளம்புவார்கள்.

## 7. விளம்பரம்

விளம்பரம் என்ற புதுச்சொல் இதிலிருந்து வந்ததுதான். விளம்பரங்களைத் தொலைக்காட்சியில் ஒரே மாதிரியில் பார்த்துக் கேட்டுப் பழகிய உங்களுக்கு, விளம்புதலே விளம்பரம் என்பது விளங்கியிருக்கும்.

மணிமேகலையில் சமய உண்மைகளைப் பலருக்கும் விளம்பவேண்டிய சூழல் இருந்தது. அதனால்

விளம்பில் *(29.129)*, விளம்பின் *(29. 275)*, விளம்பலுறுவோன் *(27. 170)* என இவ்வாறு பலமுறை ஆளப்பட்டுள்ளது. இதற்கு மேலும் இதைப்பற்றி விளம்ப வேண்டுமா? விளம்பினால் அது விளம்பரம் செய்வதாகிவிடும்.

## 8. கணியம்

கணியம் என்பதுதான் இன்றைய சோதிடம். இக்கலை வான நூற்புலமை சார்ந்தது. தமிழர் இந்தியா முழுவதும் தமது நாடாகப் பரவி இருந்தபோதே கண்டது. இன்றும் சாதகத்தைக் '**கணி**'த்துக் கொடுக்கும்படிதானே கேட்கிறோம். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று பாடிய **கணியன் பூங்குன்றன்**, பக்குடுக்கை **நன்கணியார்** எல்லோரும் வானநூற் புலமைமிக்க**கணியர்கள்.**

## 9. கணியரும் வேதியரும்

சங்க காலத்தில் 'மறுஇல் செய்தி மூவகைக் காலமும், நெறியின் ஆற்றிய' அறிவர்கள் இருந்ததாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவார். இந்த அறிவர், கணியர், ஆசான்மார், பலவகைப் பட்ட கலைவல்ல பொருநர், பாணர் எல்லோரும் நமது அறிவியல் மற்றும் கலையியல் வல்ல முன்னோர்கள். வடநாட்டிலேயே திராவிடப் பெண்களை மணந்தும் மற்றவர்கள் பிராமணப் பெண்களை மணந்தும் இரத்தக் கலப்புற்றுப் போனவர்களை, அங்கிருந்த 'தூய ஆரியர்கள்', தெற்கே துரத்தினர். இங்கிருந்த மூவேந்தர்களும் வேள்வி ஆசைமிக்கு, அங்ஙனம் கலப்புற்றுப் போனவர்களையும் தூய துறவிகள் என மதித்தவர்களையும் அழைத்துவந்து

நாளும் வேள்வி நடத்தினர். இவர்களை அன்றைய தூய வடவர்கள் 'பிரஹ்ம இராட்சதர்கள்' என அழைத்துத் தரம் தாழ்த்தி மதிப்பிட்டனர். நம்முடன் வாழும் இவர்கள் பற்றி, பி.டி.சீனிவாச அய்யங்கார் தமது ஆங்கில நூலில் தெளிவாக எழுதியுள்ளார். இவர்களே மேற்கூறிய, உயரிய குடியினர் அனைவருடனும் கலந்து போய்த் தமிழராயினர். அறிவர், கணியர், ஆசான்மார், குருக்கள், பட்டர், வேளார், சிவ ஆச்சாரியர் அனைய தூய தமிழர்களும் பூணூல் போட்டுக் கொண்டு, உயர்குலப் பெருமை தேடினர். இவர்கள் வடநாட்டு வேத வேதியர்களின் வேறுபட்ட, தமிழ் நாட்டுத் தமிழர்களாகிய சிவ வேதியர் என்பார் அறிஞர் அ.ச.ஞா. இவர்கள் அனைவரும் வாழ்வும் வருமானமும் கருதி, இன்றுவரை வடமொழியையும் சில சடங்குகளையும் இறுகப் பற்றிக் கொண்டனர். இவர்கள் கிரியை செய்தற்குரிய சில வடமொழிச் சூத்திரங்களையும் சுலோகங்களையும் தப்பும் தவறுமாகக் கற்றுக் கொண்டனரே தவிர, இவர்களில் யாரும் வடமொழி வல்லுநரல்லர். இவ்வாறு அறிஞர் பி.டி.எஸ். கூறுகிறார்.

## 10. கலைகள் தமிழ்நாட்டில்; நூல்கள் வடமொழியில்

இவர்களால் கணியமும் சிற்பமும் இசையும் நாட்டியமும் பிறகலைகளும் பெயரளவில் வடமொழி மயமாக்கப்பட்டன. அதனால்தான் கலைகள் இருப்பதெல்லாம் இங்கே; அவை எழுதப்பட்டது மட்டும் அங்கே என்ற பெரிய முரண் ஏற்பட்டது.

இவை யாவும் பி.டி.சீனிவாச அய்யங்காரும், பரிதிமாற்கலைஞரும் எழுதியிருப்பவை. நம் சரக்கு அல்ல.

வேங்கைமரம் பூப்பதை வைத்து நல்லது கெட்டது பார்த்துள்ளனர். தமிழர்களுக்குச் 'சகுனம் பார்ப்பது' (புள்); அசரீரி கேட்பது (விரிச்சி), பிறபல 'அறிகுறி' பார்ப்பதிலிருந்த நம்பிக்கை அளவு கடந்தது; எல்லையற்றது. அதனை இக்கலப்பின வல்லுநர், பூணூல் போட்டுக் கொண்டு, வட சொற்பெயர்களைக் கூறி மருட்டி, வருமானம் தேட வழியாக்கிக் கொண்டனர். இன்று ஆங்கிலத்தில் எழுதிவைப்பதுபோல் வடமொழியில் எழுதி வைத்ததுடன், தமிழ் மூலநூல்களை அழித்து விட்டனர். பரிதிமாற் கலைஞர் கூறியது இது.

## 11. தமிழ் அந்தணர் தமிழரே

இன்றைய பிராமணர்கள் எல்லோரும் ஆரியர்கள் அல்லர். நம் கணியர்களுடன், இடைக்காலத்தே 'விசுவ பிராமணாள்' எனக் கல்தச்சர், மரத்தச்சர் யாவரும் உயர்வு தேடியது போல மாறிக்கொண்ட தமிழர்களே, இவர்கள். இன்று தாங்களே ஆச்சாரியர்கள் என்று நம் தச்சர்களாம் தொழில்வல்லுநர்கள் வழக்காடியது உண்டு.

**'கார் அரும்பு அவிழ்ந்த கணிவாய் வேங்கை'**

*(நற். 373)*

**'கணிவாய்ப் பல்லிய காடு இறந்தோரே**

*(அகம். 151)*

இன்றும் பல்லிசொற் 'பலன்' கேட்பவர் உளர். அதனால் பல்லியும் குறி கூறுவதால் **'கணிவாய்ப் பல்லி'**

எனப்பட்டது. குறி காட்டும் வேங்கையும் **'கணிவாய் வேங்கை'** எனப்பட்டது. இங்ஙனம் நூறு உதாரணம் காட்டலாம்.

சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று திரும்புகின்றான். கங்கைக் கரையில், ஆரிய மன்னர் அமைத்த பாடிவீட்டில் இருக்கிறான். ஒருநாள் இரவு கங்கைக் கரையில், வெற்றி மகிழ்ச்சியுடன், அம் மாமன்னன் வானத்தை அண்ணாந்து பார்க்கின்றான்.

**அந்திச் செக்கர் வெண்பிறை தோன்ற**
**பிறைஏர் வண்ணம் பெருந்தகை நோக்க**
**இறையோன் செவ்வியில் 'கணி' எழுந்து**
**உரைப்போன்**
**எண்ணான்கு மதியம் வஞ்சி நீங்கியது**
**மண்ணாள் வேந்தே வாழ்கஎன வாழ்த்த**
***(27:146-150)***

அக் காலத்தில் இக் கணியர்கள் அரசன் கூடவே சென்றுள்ளனர். இவ் ஆசான் பெருங்கணி, பிறையைப் பார்த்து, வஞ்சிவிட்டுப் புறப்பட்டு 32 மதியம் ஆயிற்று என்று காலக் கணக்குக் கூறுகிறான்.

ஆசான் கணியரெல்லாம் இன்று ஐயர்கள் ஐயங்கார்கள் (ஐயன் அவர்கள் - ஐயன்காரு - தெலுங்கில் ஒலித்திரிபு) ஆகிவிட்டனர். தமிழுக்கும் தமிழனுக்கும் அவர்களில் சிலர் தொடர்ந்து ஆதரவு தர மறுக்கின்றனர். அரசியலில் கட்சி மாறியவன், தான் முன்பிருந்த கட்சியைக் கூடுதலாக வசை பாடுவான். அறிவார்ந்த தமிழருக்கெல்லாம் இது பொருந்தும்.

கணிக்கும் முறை - கணி - கணியன் - கணியம் - யாவும் தூய தமிழ்ச் சொற்களாதலை மேலும் கணித்தறியலாம்.

## 12. ஏழரை யாட்டைச் சனி

இன்று சோதிடர் '**ஏழரைநாட்டுச் சனி**' என்று எழுதுகிறாரே, அது பிழைபட்ட பேச்சுவழக்கு. அதன் முறையான வடிவம் 'ஏழரை யாட்டைச் சனி' என்பது. இதனை வைத்துப் பல உண்மைகளை அறியலாம்.

சனிதிசைக் குரியன ஏழரை ஆண்டுகள். அதனை மூன்று இரண்டரை ஆண்டுகளாகப் பகுத்துப் பயன்கூறுவர். 'சென்மச்சனி கவலைதருமாம்; சனிதிசை முடிவில் நன்மை தருமாம்; சனியால் என்றும் உயிருக்கு ஆபத்தில்லையாம்'. இது இன்றைய கணியர் வாக்கு.

தமிழையும் இந்த ஏழரையாட்டைச் சனி பிடித்தாட்டுகிறது. இப்போது 'சென்மச்சனி' நடக்கிறது. சீக்கிரம் சனிகள் நீங்கிவிடும். திசை திரும்பும். இந்தச் சனியன்கள் கல்வியற்ற மக்கள், சுயநலப்பேர்வழிகளுடன் மேலும் சில அரசியலாய் மிகச் சரியாக மூன்று பிரிவாயுள்ளன. இவை இனி விலகும்.

## 13. யாட்டை - யாண்டு - ஆண்டு

ஞாயிறு சுழல்வதை வைத்து ஓர் ஆண்டு - யாண்டு கணக்கிடப்பட்டது. மதியத்தின் சுழற்சியை வைத்து மாதம்/திங்கள் கணக்கிடப்பட்டது. நாளை வைத்து நாட்கள் கணக்கிடப்பட்டன. (நாள் - நட்சத்திரம் என்றே பொருள். நாளும் கோளும் என்றால் நட்சத்திரமும்

கிரகமும். தமிழன் இவ்வாறு நன்கு பகுத்தறிந்திருந்தான்)

ஞாயிறு ஆறு திங்கள் தென்திசையில் சாய்ந்தும் தைத்திங்கள் முதல் ஆறுமாதம் வடதிசையில் சாய்ந்தும் சுற்றுகின்றது. இங்ஙனம் ஞாயிறு திசைமாறும் ஓரை - இராசி **'யாடு'** ஆகும். **யாடு** இராசியை வைத்துக் கணக்கிடப்பட்டதால் **யாட்டை** எனப் பெயராக்கி, ஆண்டு முதன்முதல் அழைக்கப்பட்டது. பரத்தைவீடு சென்று, எப்போதாவது வீடு தேடிவரும் தலைவனுடன் ஊடல்கொண்ட மனைவி, **'ஓர் யாட்டுஒருகால் வரவு'** (கலி. 71-26) எனக் கூறுகின்றாள். கண்ணகிக்குத் திருமணம் அவளது ஈர்ஆறாண்டு அகவையில்' நடந்தது. இதைப் **பன்னீராட்டை** அகவை என்பர். ஓராண்டுக் காலம் பொறுப்பிலிருந்த வாரியங்களைக் கல்வெட்டுக்கள் **'ஆட்டை வாரியம்'** என்று அழைக்கின்றன.

யாட்டை மூக்கொலி பெற்று யாண்டை, யாண்டு என ஆகும். யாடு ஆடு ஆனதுபோல யாண்டு பிறகு ஆண்டு ஆனது. யாடு என்பதை வடவர் மேஷம் ஆக்கிக்கொண்டு தாமே கண்டதுபோல் உயர்வுதேடுவர். பிறகு மேடம் எனத் தமிழாக்கி இங்குள்ளார் மகிழ்வர்.

தமிழரின் வானநூற் புலமையை உணர்த்த, இதனை ஒரு நல்ல சான்றாகக் கூறலாம்.

## 14. வருடை - வருடம்

'வருடை' என்பதும் இமயச் சாரலில் ஓர் ஆட்டு வகை. அதை வைத்து வட்டார வழக்காக, வருடம் என்றனர். வருடை - வருடம். அதை வடமொழி

வருஷமாக்கிக் கொண்டது. தமிழரின் வருடம் அங்குபோய், மீண்டது வியப்பே.

முனைவர் தே. ஆண்டியப்பன் இதை ஆராய்ந்து கூறினார். தமிழர்தம் கலைகள் முதல் கலைச்சொற்கள் வரை அனைத்தையும் வடமொழி மயமாக்கிக் கொண்டு, அவற்றைத் தமிழர்களுக்கு முன்பே தாம் அறிந்தது போலக் காட்டிக் கொள்வது, வடவர் இயல்பு. இதைப் பரிதிமாற் கலைஞரே கூறியுள்ளார். அவருடைய தமிழ்மொழி வரலாற்றைப் படியுங்கள்.

## 15. மாதம்

வட்டார வழக்கு என்று சிதைந்த, கொச்சையான வழக்குகளையே, பிழைபட்ட சொற்களையே எடுத்தாண்டு கதைகள் எழுதத் தொடங்கினர். ஒருவர் 'கரிசல் காட்டுத் தமிழ்' என இவ்வாறு எழுதித் தமிழைச் சிதைக்க வழிகோலினார். அவர் மிக நல்லவர். கரிசல் தமிழுக்கு அகராதியே போட்டார். சங்க இலக்கியத்துக்கு அகராதி வைத்துப் படிப்பதா? அப்பப்பா கொடுந்தமிழ், கடுந்தமிழ் எனச் சில கூட்டம் கதறிப் புலம்பியது. ஆனால் கரிசல் தமிழை அகராதி வைத்துப் படிப்பதைப் போற்றியது. ஒருவார இதழ் இவ்வாறு எழுதிய அவரையும் அதைப் பின்பற்றிய பலரையும் பரிசு தந்து, பணங்கொடுத்துத் தமிழைச் சீர்குலைக்கத் தன்னாலான தொண்டைச் செய்தது. தமிழிலேயே எழுதிப் பிழைப்பவர்கள், தமிழ்ப் புலவர்களைக் கிண்டல் செய்துவிட்டு, இவ்வாறான போலிகளை ஆதரித்து, தம்மைத் தாங்கும் தமிழையே அழிக்க முயல்வது வேதனை தருகிறது.

மாதம் என்பதை மாசம் என்றும் மாஸ என்றும் சொல்லி, எழுதி மோசம் போகிறோம். வடமொழியிலும் ஏறிய தமிழ்ச்சொல் இது. வடமொழி அறிஞர்களான எமனோவும் பரோவும் தமிழ் வடமொழியிலிருந்து கடன் வாங்கியது போலவே, வடமொழியும் தமிழிலிருந்து கடன்வாங்கியது என்பதைச் சான்றுடன் எடுத்துக்காட்டினார்கள்.

'நாள் - நாள் மீனை (நட்சத்திரத்தை) வைத்துப் பெயர்சொல்லப்பட்டது.

மாதம் எப்படிக் கணக்கிடப்பட்டது? மதியத்தை வைத்தே கணக்கிடப்பட்டது. தேய்பிறை வளர்பிறை சேர்ந்த 30 நாள் கொண்டது ஒரு திங்கள் / மதியம் ஆனது. அஃதேபோல ஞாயிற்றின் சுழற்சி 'யாடு' ஓரையை வைத்து, கணக்கிடப்பட்டது. அது பன்னிரு மதியம் கொண்டது.

பெருங்குன்றூர்கிழார் ஒரு சேரனை வாழ்த்துகிறார், இவ்வாறு :

> **'நின்நாள் திங்கள் அனைய ஆக!திங்கள்**
> **யாண்டு ஓரனைய ஆக! யாண்டே**
> **ஊழி அனைய ஆக! ஊழி**
> **வெள்ள வரம்பின ஆக!** *(90)*

திங்கள் என்பதும் மதியம் என்பதும் ஒன்றே. சேரநாட்டுப் பிற்கால மன்னர்களை, திருவாதிரைத் திருநாள், மூலந்திருநாள் என்று அம் மன்னர்கள் பிறந்த நன்னாளை (நட்சத்திரத்தை) வைத்துப் பெயர் குறிப்பிடுவார்கள்.

## 16. தமிழரின் வானியல் அறிவு

நட்சத்திரம் என்றே சொல்லிச் சொல்லிக் கேட்டுக் கேட்டுப் பழகிப்போன நம் செவிகளுக்கு, நாள்மீன் என்றால் நட்சத்திரம் என்பது மறந்துபோனது. மின்னுதலால் பெயர்பெற்ற மீனுக்குரிய நாளை, இது கார்த்திகைநாள், இது பரணிநாள் என்றே முன்பு குறித்தனர் என்பதும் இப்போது விளங்குவது கடினமே. ஞாயிறு திங்கள் என்பன கிழமைப் பெயர்கள். ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை எனல் வேண்டும். 'நாள்' என்றால் முன்பு இது பரணிநாள், கார்த்திகை நாள், திருவாதிரைநாள், திருவோணநாள் என்றே - குறித்தனர். தமிழரின் வானநூலறிவு ஆழமானது. நுட்பமானது. தமிழன் தன் சொத்தை இழந்தது மட்டுமன்றி, அதை மீட்கவும் மறந்து போனான்.

நாள்மீன், கோள்மீன் என்பன எத்துணை அழகிய அறிவியல் பெயர்கள். இக் குறியீடுகளே தமிழனின் வானநூற் புலமையைக் காட்டவில்லையா? கோள் - கோளம் - கிரகம். தமிழர்களே! உங்களுக்குச் சிறிதேனும் சுரணையிருந்தால், தேடுங்கள்; உங்களின் பழஞ் செல்வங்களைத் தேடுங்கள். இழந்தவற்றை மீட்க முயலுங்கள்!

மாதம்தான் மாசமாக்கப்பட்டது. சேரன் செங்குட்டுவன் கங்கையின் கரையில் இருந்தபோது, ஆசான் **பெருங்கணி**, அரசே, எண்ணான்கு **மதியம்** வஞ்சிநீங்கியது' என்று கூறுகிறான். **மூன்றாம் பிறைதான்** கண்ணுக்குத் தெரியும். வளர்பிறை மூன்றாம் பிறையைக் காணக் காத்திருப்பதும் கண்டு தொழுவதும் இன்றும்

பெண்களிடம் காணப்படுகிறது. அதை வைத்தே மாதமும் கணக்கிடப்பட்டது. தேய்பிறைக்குப் பின் மாதம் - மதியம் - மீண்டும் தொடங்கியதைக் கண்ணுக்குக் காட்டுவது மூன்றாம் பிறை. அதுவே அன்றைய 'மாதங்காட்டி. ஒவ்வொரு நாளும் பிறை வளர்வதைக் 'கலை' என்பார்கள். சிலம்பில் '**யாண்டும், மதியும், நாளும், கடிகையும்**' என வருமிடத்தும் 'மதி' - மாதத்தையே குறிக்கிறது. *(27-9)*. 'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின் ... இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவின்' என்ற பாரிமகளிர் பாடல். இது சென்ற மதியத்தையும், வந்துள்ள மதியத்தையும் ஒப்பிடுகிறது (புறம் 112). மதி, மதியம், மாதம், திங்கள் என்பன ஒரு பொருளன. திங்கட் கிழமை என்னும் நாம் 'திங்கள்' என்றதும் மதியத்தை நினைப்பதில்லையே. சந்திரன் என்றால் மட்டுமே புரியுமளவு, தமிழன் மட்டப்படுத்தப்பட்டுள்ளான். செவ்வாய் என்று கோளுக்கு அதன்நிறம் தெரிந்து பெயரிட்டதை என்சொல்ல?

## 17. பக்கம் - மதியத்தின் இருபக்கம்

பக்கம் என்பதே மதியின் வளர்பிறைப் பக்கம் என்றும் தேய்பிறைப் பக்கம் என்றும் தொன்றுதொட்டு வழங்கிவந்துள்ளன. 'எண் நாள் பக்கத்துப் பசுவெண் திங்கள் தோன்றியாங்கு' பெண்ணின் நெற்றி இருப்பது அழகு (குறுந். 129). அதற்குக் குறைவான அளவுள்ள நெற்றியும் அழகாயிராது; அதைவிட மிக அகன்ற நெற்றியும் அழகு தராது. வளர்பிறை எட்டாம் நாள் பிறை எவ்வளவு அகலமோ, அவ்வளவு அகலமுள்ள

நெற்றியே அழகு தருமாம். உறுப்பு இலக்கணம் சொல்கிற குறுந்தொகை, 'எட்டாம் கலைப் பிறையினது அகலத்தை' உவமை சொல்கிறது. எட்டாம் பிறையை இன்று அட்டமி என்பார்கள். பக்கத்தைப் பட்சம் என்று மிகப் பக்குவமாக மாற்றிக்கொண்டு, ஒரு பக்கமாகச் சாய்த்து விடுவார்கள்.

பதற்றத்தைப் பதஷ்டம் என்றும் கட்டத்தைக் கஷ்டம் என்றும் முட்டியை முஷ்டி என்றும் சொல்லும் கோட்டி (கோஷ்டி) இது. கூட்டம் கூடுதல் கோட்டி எனப்படும். முட்டி - முட்டு - மூடு - கையை மடக்கி விரல்களை மூடி முட்டுவது முட்டி. கையால் முட்டப் பயன்படும் கைமுட்டியை, முஷ்டி என்பவர்களை, முட்டி என்ன செய்ய? திருவள்ளுவர் 'கொடிறு உடைக்கும் கூன்கை' என்றாரே அது இதுதான்.

## 18. நிறைமதியும் மறைமதியும்

'நிறைமதி அலர்தருபக்கம்' என்று வளர்பிறை குறிக்கப்படும் *(பரி.11-31)*. வையையில் நீர்பெருகி வருவது வளர்பிறைப் பருவம் போல் உளதாம். அது 'பெரும் பக்கம்' - 'முற்பக்கம்' எனவும் சொல்லப்படுகிறது. அதன் பிற்பக்கம் தேய்பிறை.

> வழியது பக்கத்து அமரர் உண்டி
> மதிநிறைவு அழிவதின் வரவு சுருங்க
> எண்மதி நிறைஉவா இருள்மதி போல
> நாள் குறைபடுதல் *(பரிபாடல் : 11-35-38)*

வையைநீர் சுருங்குகிறது. எவ்வாறு? மதி நிறைவு அழிந்து சுருங்க, எட்டாம் பக்கத்து மதி அளவாதலன்றி,

இருள் உவாவினைப் போல நீர் மேன்மேலும் சுருங்கியதாம். எட்டாம் பக்கத்து (அட்டமி) அளவாக அங்கங்கே கிடந்த நீரும், இருள் உவாவினைப் போல வரவரச் சுருங்கியதாம்.

'வயங்கு ஒளி ஈர் எண் தீங்கதிர்ப் பிறை வளர் நிறைமதி' *(பரி.3:51-52)* என்று பதினாறு கலை வளர்ந்த முழுமதி குறிக்கப்படும்.

மேலே 'மதிநிறை உவா' என்பது வளர்பிறைப் பதினான்கு நாட்கள். இருள்மதி உவா என்பது தேய்பிறைப் பதினான்கு நாட்கள். இதை வெள்ளுவா, காருவா எனவும் அழைத்துள்ளனர். நிறைமதி - முழுமதி. மறைமதி-இருள்மதி. 'உவாப் பதினான்கு' என்பது நிகண்டு. ஒவ்வொரு பதினைந்தாம் நாளும் - அதாவது முழுநிலவுநாள், நிலா மறைவு நாள் இரண்டும் - முன்பு பள்ளிகட்கு விடுமுறையாகும். இதை உவா என்றமை பேச்சில் வாவு என்றாகி, அண்மைக் காலம் வரை 'பள்ளிக்கூடம் இன்றைக்கு வாவு' என்றே சொல்லிவந்தார்கள். உவா- வாவு ஆகி - அது விடுமுறை எனவும் பொருள்பட்டுவிட்டது. உவாஉவா எனத் திரும்பத் திரும்பச் சொன்னால் வாவு என ஒலிக்கத் தொடங்கும். பேச்சில் ஒலித்திரிபுகள் இவ்வாறு ஏற்படும்.

முற்பக்கமும் பிற்பக்கமும் நிறைநாள் மறைநாள் யாவும் சேர்ந்து முப்பது நாளாயின. பக்கம் - பட்சமானதால் நமக்குப் பொருள் விளங்காமலும் போனது. சுக்கில பட்சம், கிருஷ்ணபட்சம் என்பன மொழிபெயர்ப்பே என்பது விளங்கவில்லையா? நடுநிலை மனமிலாதாரை விட்டுவிடுவோம். அவர்கள்

தேய்பிறைப்பக்கம் - கார் உவாவினர். நாம் வெள் உவாப் பக்கம் சார்ந்து முழுநிலவைக் காண்போம்.

## 19. கூர்தல்

கூர்தல் என்பது மிகப் பழைமையான சொல். தொல்காப்பியரே அதை உரிச்சொல் என்று கூறியுள்ளார். உரிச்சொல் - அரியசொல்; செய்யுளுள் (அன்றைய இலக்கியத்துள்) ஆளப்பட்ட சொல்; அடைமொழியாக வருஞ்சொல். பல உரிச்சொற்கள், வேர்ச்சொற்கள்; பல சொற்களாகப் பல்கவும் பல பொருள்கள் தரவும் கூடியவை.

**கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்.** *(தொல். 797)* முன்பு உள்ளது ஒன்று சிறுகச் சிறுகக் கூடுதல். கூர் - கூர்மை. கூர்மைக்கு ஓர் அளவில்லை. அதனினும் கூர்மை இது; இதனினும் கூர்மை அது எனலாம். கூர்மை மட்டுமன்று; வளர்தல் பெரிதாதல், உயர்தல், மிகுதலுமாம். கூரிய பார்வை, கூரிய நோக்கம் வேறுவேறு. கூர் மழுங்குதல் கூர் கெடுதல், கூர் அழிதல் வேறு. பரிணாமம். Evolution என்பது உலகத் தோற்றமும் வளர்ச்சியும் பற்றியது. ஒரு செடியின் பரிணாமம் முதல் ஒரு கோட்பாட்டின் வளர்ச்சிவரை குறிக்கக் 'கூர்தலறம்' எனும் சொல்லைத் திரு.வி.க.படைத்தார்.

இன்று அன்றாடப் பேச்சிலும் 'நினைவு கூர்தல்' உளது. நம் கழகத்திற்கு முன்னைய தலைவர் கட்டடம் கட்டித் தந்ததை நினைவுகூர்ந்து, நன்றி சொல்கிறோம். பல அழிவுகளிலிருந்தும் உட்பகைகளிலிருந்தும் தமிழைக் கட்டிக் காத்த பெருமை தமிழ்ப் புலவர்களுக்கே உண்டு என்பதை நினைவுகூர்வோமாக.

'மண்ணக மடந்தை வான்துயர் கூர'க் கோவலன் கொலையுண்டு வீழ்ந்தனனாம் (சிலம்பு : 16-215). சங்க காலத்தில் துயர் கூர்வாடை படர்கூர் மாலை இவ்வாறு வரும்.

இப்பழஞ்சொல் இன்றும் புழக்கத்திலிருப்பதை நினைவு கூர்ந்தால், இத்தகைய மொழியைப் பெற்ற நாம், அதைப் பேணிக் காக்காமல், நேற்றும் முன்னைய நாளும் தோன்றிய மொழிகளைப் பேணி, மோகத்தில் ஆழ்கிறோமே என்ற உணர்வு தோன்றும். நாம் நேற்றுப் பிறந்து நாளை மடியக் கூடியவர்கள். நாலாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக, இளமை மாறாது, இன்றும் விளங்கி வரும் தாய்மொழியைப் பெற்ற நாம், பிறர் எவரினும் மேம்பட்டவர்கள் என்ற பெருமித உணர்வைப் பெறுவோமாக!

## 20. வளி

'வளி முதலா எண்ணிய மூன்று' (குறள். 941) என்னும்போது வளி என்பதற்குக் காற்று அல்லது வாயு என்று பொருள் கூற வேண்டும். 'விசும்பு தைவரு வளியும்', 'வளி வழங்கு திசையும்' , (புறம் 2, 20) என்று புறநானூற்றில் வருமிடங்களில் சிலர் 'வளியின்' பொருளை அகரமுதலிகளில் தேடுவர். இன்று பேச்சு வழக்கிலுள்ள 'சூறாவளி'யில், 'வளி' உளது. சூறைக்காற்று என்று சொல்கிறோம். 'வளிச்'சொல் வழக்கிலிருப்பதை மறந்துவிடுகிறோம்.

ஒருசொல்லைப் பயன்பாட்டு நிலையில், அதனுடைய செலாவணியை வைத்துத்தான் மதிப்பிட முடியும். அது கையிலுள்ள நாணயம், பணத்தாள் போன்றது.

செலாவணியானால்தான் - செல்லுபடியானால்தான் மதிப்பு (செலாவணி செல்லுபடியாகும் ஒன்றைக் குரிக்க வந்த புதுச் சொல்லாக்கம்). செல்லாதகாசோ, தாளோ எதற்கும் உதவாது. சொற்களும் அப்படியேதான். அவற்றைச் செலாவணியில் - புழக்கத்தில் விடாது கைவிட்டால், பொருள் அரிதாவதோடு, அச்சொல் அருஞ்சொல்லாகி மறையவும் நேரும்.

வாழும் மொழியில் இம் மாற்றங்கள் இயல்பே. இன்னும் சொன்னால் இம் மாற்றங்களே உயிருடைமைக்கு அடையாளம். ஆனால் வளர்ச்சிக்கு அடையாளமான மாற்றங்களாக மட்டுமே அவை இருக்கவேண்டும். நம் உயிர்வளி போன்றதே, தமிழின் 'வளி' எனும் சொல்லும். வள் - வண்மையிலிருந்து வரும் வளி, நம்மை வாழவைப்பது. அவ் 'வளியை' நாம் வாழவைக்க வேண்டும்.

பிராண வாயு என்றார்கள். இன்று அதனை உயிர்வளி என்று எளிதாக்கியுள்ளனர்.

## 21. அமர்க்களம்

'அங்கே என்ன ஒரே அமக்களமா இருக்கிறது?' என்பதுண்டு. 'சும்மா அமக்களப்படுத்தாதே' என்பதுண்டு. திருமண வீடுகளில் பிள்ளைகளின் 'அமக்களம்' பொறுக்க முடியாது. இவை பேச்சுவழக்கு.

இதன் பொருளென்ன? இச் சொல் எங்கிருந்து வந்தது? 'அமர்க்களம்' என்பதிலிருந்து வந்தது இது. அமர் - போர். போர்க்களத்தில் எப்பொழுதும் கூச்சலும் கூப்பாடுமாயிருக்கும். அமளி துமளியாகும்.

அமர் என்றுமட்டும் இலக்கியத்தில் வந்துவிட்டால், தமிழ் படிக்காதவர்கள் இதனை ஓர் அருஞ்சொல் என்பார்கள். இன்றும் நம் பேச்சில் உள்ள அமர்க்களத்தில், அமர் இருக்கிறதே? நாட்டிற்குள் அமர் இல்லை. ஆனால் வீடு அமர்க்களமாகிறதே?

இந்த அமர் - சமர் என்றும் வழங்கும். அவை - சபை. ஆன்றோர் - சான்றோர். அமையம் - சமையம்.

ஏதம் - சேதம், கேதம். ஏமம் - சேமம். ஏது - 'ஹேது'. நம்சொற்களை நாமே பிறசொற்களென எண்ண வேண்டாம். நம்மிடமிருந்து பிறர் எடுத்துக் கொண்டதை, நாம் மீட்பதே நல்லது. அவர்கள் உரிமை கொண்டாடினாலும், பாத்திரத்தில் நம் முத்திரை இருக்கிறது. நம் தெய்வப் பெயர்கள், ஊர்ப்பெயர்கள் முதற்கொண்டு, நாம் பறிகொடுத்தவர்களே தவிர, உருமாற்றிப் பெயர்மாற்றிப் பெருமை தேடுவது நம் இயல்பன்று. இயல்பான பெருமையுடையவர்கள், சிறுமையில் இறங்கமாட்டார்கள்.

## 22. குறுக்குச்சால்

சாலோடும் வழியில் நீரோடும் என்பார்கள். செய்யில் (வயலில்) ஏர் உழுதுபோகும் வழி பள்ளமாகிக் கொண்டே போகும். அது சால் எனப்படும். முதலில் ஏரை ஓட்டுபவன்தான் கடின உழைப்பாளி ஆதல் வேண்டும். முற்காலத்தில் தலை ஏர் பிடித்து ஓட்டுபவனைத் தேடிப் பெண் கொடுத்ததுண்டு. பின்னால் உழுபவர்கள் எல்லாம் அச் சால்வழியே, எளிதாகத் தம் ஏரை ஓட்டிச்செல்லமுடியும்.

அதிலும் சிலர் உழுத சால்வழியே ஏரை ஓட்டாமல் குறுக்குச் சால் ஓட்டி, உழுவதைத் தடைசெய்து, கெடுத்திருக்கிறார்கள்.

அது இன்று மரபுத் தொடராய், ஒரு காரியத்தை இடையிலே புகுந்து கெடுப்பவனைப் பார்த்து, 'குறுக்குச் சால்' ஓட்டுகிறான் என, உலக வழக்கில் கூறப்படுகிறது.

'சால்' என்றதும் அருஞ்சொல்போல் தோன்றியதைக் குறுக்குச் சால் ஓட்டியவர்கள்தான் எளிய சொல்லாக இன்றும் உணர வழிசெய்துள்ளனர். அந்த அளவு அவர்களுக்குப் பெருமையே. குறுக்குச் சால் ஓட்டுபவர்கள் இன்று கூடுதலாகி விட்டனர்.

## 23. களேபரம்

'அங்கே என்ன ஒரே களேபரமாக இருக்கிறது?' என்று கேட்பார்கள். இது தமிழல்லாததுபோல், தமிழில் வழங்கும் ஒரு தமிழ்ச்சொல். ஒரே குழப்பமான நிலையை இது சுட்டும். பேச்சு வழக்கில் மட்டுமே உளது. கணவன் மனைவிக்குள் பெருஞ் சண்டை மூண்டால் அங்கே ஒரே அமர்க்களமாகிவிடும்; தெருவெல்லாம் கூடிவிட்டால் சண்டை முற்றி ஒரே களேபரமாகிவிடும்.

ஒருவர் ஒருவருடன் மோதிச் சண்டையில் ஈடுபட்டால், 'கைகலப்பு' ஆகிவிட்டது என்பர். கைகலப்பு, கலகம் ஆகிப் பிறகு கலவரம் எனவும் ஆகும்.

களப்பிரர் என்பார் நடு இந்தியப் பகுதியிலிருந்த வேற்றுமொழியினர். தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்த மூவேந்தரை எதிர்த்து, அவர்கள் இங்கு

நுழைந்தனர். அவர்கள் பௌத்த மதத்தினர். பாலி, சமற்கிருதமென வேற்றுமொழி, ஆட்சிபீடம் ஏறித் தமிழ் புறந்தள்ளப்பட்ட காலம் அது. அதற்கு முன்னரும் சமணமும் புத்தமும் இங்கிருந்தன. எனினும் அவர்கள் தமிழ் மன்னர்களின் கீழ்ச் செயற்பட்டனர். தமிழ் மேலாண்மை அரசோச்சியது. ஆனால் இவ்வேற்று மன்னர் முதன்முதல் வந்ததாலும், இங்குள்ள தமிழக அரசக் குடிகள் ஒற்றுமையின்றி, ஒருவருடன் ஒருவர் போர் செய்ததாலும் தமிழகம் சில நூற்றாண்டுகள் ஒரே குழப்பத்திற்குள் அகப்பட்டுக் கிடந்தது. இதனையே பேச்சில் 'களேபரம்' என்றனர். களப்பிரரால் ஏற்பட்டுக் கலகக் குழப்பம் ஆனதால், தமிழர்கள் 'நாடு களேபரமானது' எனப் பேச்சில் கூறலாயினர். இது களேவரம் எனவும் வழங்கும்.

## 24. சேய்மை

'எங்க'வீட்டுக்காரர் சீமைக்குப் போயிருக்கிறார். 'அவுக சீமைச்சமத்தன்' என்பது ஒரு வட்டார வழக்கு. 'அவர் என்னவோ சீமையிலிருந்து வந்த மாதிரி பேசறாரு' என்பர். வணிகத்திற்காகச் சீமைக்குப் போவதே பண்டைய வழக்கு.

மண்ணெண்ணெய் - இன்னும் சுருக்கிச்சொன்னால் - மண்ணெய் - சீமை எண்ணெய் எனப்படுவது பேச்சில் உளது.

'சேய்மை' என்பதே சீமை என ஆகிவிட்டது. சேய்மையில் உள்ள நாடுகளெல்லாம் சீமைகள் ஆகிவிட்டன. நம் நாட்டிலேயே 'தென்பாண்டிச்சீமை', 'சிவகங்கைச் சீமை' என வழங்குகின்றன. 'சீமை' ஒரு

சிறந்த பகுதி, நாடு என்ற பொருளில் இங்கும் சேர்ந்துகொண்டது. சீமைபோல் சிறந்ததாம் அது. தமிழன் உலகளாவ, வாணிகம் செய்யப்போனாலும் போனான்; அன்றிலிருந்து அவனுக்குச் சீமையில்தான் (சேய்மையில் உள்ளவற்றில்தான்) அளவற்ற மோகம்!

## 25. கம்பலை

'கம்பலை' என்றால் பொருள் என்ன? ஓர் அரிய சொல் போலத் தோன்றுகிறது. கம்பலை என்றால் ஆரவாரம், பேரொலி, சந்தை இரைச்சல் என்று பொருள் கூறுவர்.

சிலப்பதிகாரத்தில், இந்திரவிழா முடிந்து கடலாடு காதையில், மக்கள் அனைவரும் கடற்கரையில் இன்னிசை முழங்க, ஆடிப்பாடி ஆரவாரிக்கின்றனர். கடலலை ஓசை வேறு. காதலர்கள் எழினிகளின் கீழிருந்து, பந்தர் போலும் இன்றைய, 'சாமினா' என்பவற்றின் கீழே அமர்ந்து, பாடல் இசைத்து மகிழ்கின்றனர். மாதவியும் கோவலனும் அத்தகையதொரு எழினியின் கீழிருந்துதான் கானல்வரி இசை பாடினர்.

**வேறுவேறு கோலத்து வேறுவேறு கம்பலை** *(6-161)* என்று

இளங்கோ குறிப்பிடுகின்றார்.

கோவலன் வெட்டுண்டு கிடக்குமிடத்தைக் கண்ணகிக்குக் காட்ட, மதுரை மக்கள் - **மாமதுரைக் கம்பலை மாக்கள் கணவனைத் தாம் காட்ட** - *(19-29)* ஓடுகிறார்கள். அரற்றிப் புலம்பிக் கொண்டு, கண்ணீரைக் கொட்டுவது இங்கு 'கம்பலை' எனப்பட்டது.

போரில் புண்பட்டு வருந்தும் வீரர்களைக் கொண்ட ஊரையும் காதலர்களைப் புறங்கூறி அலர்பேசும் ஊரையும் விழா நிகழும் ஊரையும் **'கம்பலை மூதூர்'** எனக் குறிப்பதுண்டு. சங்கப் பாடல்களில் இவ்வாறு ஆளப்படும் இச்சொல்லைத் தொல்காப்பியர் **'உரிச்சொல்'** என்று கூறிப் பொருள் சொல்கிறார்.

> **கம்பலை சும்மை கலியே அழுங்கல்**
> **என்றிவை நான்கும் அரவப்பொருள** *(832)*

வாய்விட்டுப் புலம்பி அழுகின்ற ஆரவாரம் என்பதையும் இது குறிக்குமென்பதற்கு 'அழுங்கல்' என்பதும் இதனுடன் கூறப்பட்டிருப்பது உறுதி செய்கிறது.

இத்துணை அரிய சொல்போலத் தோன்றும் இது, இன்றும் மிக எளிய சொல்லாக மக்களிடையே வழங்குகிறது. **'கண்ணீரும் கம்பலையுமாக ஓடி வந்தாள்'** என்று இன்றைய படைப்பாளிகளும் இச்சொல்லை ஆள்கின்றனர். உலக வழக்கில் இன்றும் இது காணப்படுவது, தமிழ்மொழியின் இடையறாத தொடர்ச்சிக்கும் இளமைக்கும் ஒரு சான்று.

## 26. சமையம்

'சமயக்கணக்கர்' என்ற சொல் கல்லாடத்தில் காணப்படுகிறது. பழைமையைப் பழமை எனச் சொல்லி, எழுதும் பழக்கம் ஏற்பட்டது போலவே, சமையம் என்பதும் சமயம் என ஆகியுளது. சமையம் எனலே பொருந்துவது.

வடமொழி 'சமய்' என்பது காலத்தைக் குறிக்கும். அது தமிழில் வழங்கும் சமயமாகாது. 'மதம்' என்பது வேறு. 'மதம்' கொள்ளுதல் வேற்றுமைப்படுத்தும். யானைக்கு மதம் பிடித்துவிட்டது என்பர். தமிழில் சமைதல் - பக்குவப்படுதல், ஒன்றற்கு ஆயத்தமாதல், பொருத்தமாதல். சமைத்தலும் உணவைப் பக்குவப்படுத்துதலே. உண்பதற்கு ஏற்ப உணவை ஆயத்தமாக்குதலே அது. சமை - மனிதன் தன் உட்கருவிகளை அடக்குதலையும் குறிக்கும். பெண் சமைதல் - திருமணத்திற்கும் பிள்ளைப் பேற்றுக்கும் பக்குவப்படுதல். இவை யாவும் உலக வழக்கில் மிகுதி.

சமைவு - சமை - முனிவர்கள் சமைவொடும் வழிபட - முற்றுப்பெற நிறைவுடன் வழிபடுவதைத் தேவாரம் இவ்வாறு குறிப்பிடுகிறது.

சைவ சமையத்தின் உயிரான கருத்தே, உயிர்கள் பக்குவப்படுதல்தான். மக்கள் வழக்கில் இச்'சமையம்' புழங்கியுளது. சமைத்தல் - படிமம் சமைத்தல், நல்ல அணிகலன்களைச் செய்தல் என்ற பொருள்களிலும் வழங்கியுளது. மணிமேகலையில் இச்சொல் வழக்கு மிகுதி. எனவே சமையமே சமயமானது என எண்ணுவதில் தவறில்லை. புதுச்சொல்லாக்கமாயினும் நாம் சமயத்தைக் கொள்வோம். மதம் என்பதைவிடச் சமயம் பக்குவமான சொல்லாகப்படுகிறது.

## 27. அடிசில்

அடப்படுவது எதுவோ அது அடிசில். அடுதல் - பலபொருள் ஒருசொல். இங்கு சமைத்தல் எனப்படும்.

'பேக்கரி' என்பதை 'அடுமனை' எனக் கோவையிலும் பிற இடங்களிலும் பெயர்ப்பலகையில் எழுதி வைத்திருந்தனர். பாவாணர் வழியினர் முயற்சி அது. அடப்பட்டது 'அடிசில்' ஆனது. பாலுடை அடிசில் (அகம்.394) நெய்மலி அடிசில் (குறிஞ். 204); கமழ்குய் அடிசில் (புறம்.10) என வருவனவற்றைப் படிக்கும் போதே, வாயில் அள்ளூறுகிறது. கமழ்குய் எனவும் குய்ப்புகை கழும எனவும் வருவனவற்றைப் பார்க்கும்போது, 'தாளிதத்தில்' தமிழர்கள் உணவு சமைக்கும் திறனை அன்றே வெளிப்படுத்தினர் போலும் என எண்ணத் தோன்றுகிறது. 'போடா, உன்னைத் தாளித்துவிடுவேன்' என்று இன்றும் சொல்கிறார்கள். தாளித்தலும் பக்குவப் படுத்துதலே; கடிந்தும் அடித்தும் திருத்துதல் அது.

இன்று கோயில்களில் 'அக்கார அடிசில்' என்றே கூறுவதை நினைத்துப் பாருங்கள். அரியசொல்லோ என நினைப்பது, அடுக்களை சார்ந்த சுவையான சொல்லாகவும் இருக்கிறது. அக்காரம் - சர்க்கரை, இனிப்பு. 'அடித்து அடித்து அக்காரம் முன்தீற்றிய அற்புதம் அறியேனே' என்பது திருவாசகம் (அற்புதப் பத்து). அடிசில் - சர்க்கரைப் பொங்கற் சோறு

## 28. தண்டமும் தண்டனையும்

தண்டுதல் - கொள்ளுதல். 'யான் தண்டவும் தான் தண்டான்' (புறம். 384) - யான் கொள்ளவும் மன்னன் தான் குறைவுபடாமல். தண்டாது (குறிஞ். 56). போதுமென விடாது. தண்டியோர் - இன்பத்தைப் பெற்றவர் (குறு. 177).

இடைக் காலத்தில் தண்டுதல் - வரி வாங்குதல், வரி வசூலித்தல் ஆனது. தண்டல்காரன் - வரி வசூலிப்பவன்.

மேலும் குற்றம் செய்பவர்களை 'இத்தனை பணம் காசு செலுத்தவேண்டும்' எனத் தீர்ப்புச் சொல்லி, அக்காசைத் தண்டுவர் அதாவது வசூலிப்பர். இதனால் குற்றத்திற்காகக் காசு கட்டுவது தண்டக் காசு எனவும் அதனைத் தண்டம் எனவும் அவ்வாறு குற்றத்திற்காகப் பணம் தண்டுவதைத் தண்டனை என்றும் இவ்வாறு சொற்கள் உருவாயின. வீண்செலவை இன்றும் 'இது தண்டச் செலவு' என்பர். தண்டிக்கப்படுதல், சிறைத் தண்டனை யாவும் இவற்றிலிருந்து உருவாயினவே.

தண்டல்காரன், தண்டல்காரி இன்றும் சில ஊர்களில் உள்ளனர். அவர்கள் ஊர்ப் பொதுச்செய்தியை வீடுவீடாகச் சென்று சொல்வதை மட்டும் இன்று மேற்கொள்கின்றனர். நகரத்தார் ஊர்களில், நகரக் கோயில் வரியை இவர்கள் 'தண்டியது' உண்டு. அதாவது 'வசூலித்துக்' கோயிலில் கொடுத்ததுண்டு. 'தண்டமும் தணிதி நீ பண்டையிற் பெரிதே' (புறம். 10) என்னும் போது, பகைவர் பணிந்துவரின் அவரிடம் பெறும் திறைப் பொருளைக் குறைவாகப் பெற்றுக் கொண்டு அருள்வான் என்பதே பொருள். தண்டம், தண்டித்தல் என்ற பொருள்கள் முன்பே, இவ்வாறு வந்தனவே. 'தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரன்' என்ற பழமொழி சிறுசிறு குறுநில மன்னர்களாய், நிலக்கிழார்களாய் இருந்துகொண்டு, மக்களை அச்சுறுத்தி வரி வசூலித்த கொடுமைபற்றி வந்தது.

தண்டுதல் கொள்ளுதலாகி, இறை அல்லது வரி வசூலித்தலாகி, பிறகு ஊர் நடுவரால் குற்றத்திற்குக் கட்டுமாறு பணிக்கப்பட்ட காசைத் தண்டுகிற தண்டமாகி, அதுவே தண்டம், தண்டனையாகி, அவ்வாறு தண்டுபவர்கள் தண்டல்காரர்களாகி இச்சொல் வரலாறு நீண்டுளது. ஒன்றும் பயனற்றதைத் 'தண்டம்' என்றும் வீட்டில் சோம்பிக் கிடந்து தின்பவனைத் 'தண்டச் சோற்றுத் தடியன்' என்றும் வெறுக்குமளவு, தண்டுதல் - தண்டமானது.

தண்டு எனும் காம்புத்தண்டு, அடித்தண்டு வேறு. இது வேறு.

## 29. சாரியும் சாரையும்

எறும்பு சாரிசாரியாகப் போகிறது. குதிரைப்படை, காலாட்படை, தேர்ப்படைகள் போரின்போது, சாரி சுற்றுகின்றன; வட்டமாய் ஓடிப்போர் செய்கின்றன. சாரி - பக்கம். சாரி - இடது சாரி, வலது சாரி என்பன பேச்சு வழக்கு. சாரி சுற்றுகை, சாரிகை, சாரி - வட்டமாய் ஓடுதல். சாரி கொள்ளுதல் - நாட்டியத்தில் இடம் வலமாக ஆடுதல்.

சாரை - ஒரே நீளமான கோடு. எறும்பு சாரை போகிறது. நீளமான கோடுபோல் போகிறது. இவை பெரிதும் பேச்சுவழக்கு. 'முட்டை கொண்டு வற்புலம் சேரும், சிறுநுண் எறும்பின் சில்ஒழுக்கு ஏய்ப்ப' (*பும்.173*). பண்ணன் எனும் வள்ளல் வீடு நோக்கி வரிசை வரிசையாகச் சென்று, சோற்றுத் திரள் பெற்றுப் பரிசிலர் போகின்றனராம். வற்புலம் - வன்புலம் - மேட்டுநிலம்.

எறும்பு சாரை போவது, ஓர் ஒழுங்குபட இருக்கும். ஒன்றைஒன்று பின்பற்றிப் போகுமே தவிர, ஒன்றை ஒன்று முந்தாது. வரிசை கலையாது. இன்று இதைக் 'கியூ' வரிசை என ஆங்கிலத்தில் அழைப்பர். இதை நாம் சாரை வரிசை எனலாம். எறும்பிடமிருந்து மனிதன் கற்றுக் கொள்ள வேண்டியது சுறுசுறுப்பு மட்டுமன்று சாரி வரிசையும்தான். 'சாரி' வரிசை இலக்கியத்திலும் காணப்படும். சாரை - பேச்சுவழக்கு. 'எறும்பு சாரை சாரையாக ஊர்கிறது' என்பார்கள்.

## 30. வீயும் சமயம்

'வீயஞ்சமயத்துக்குக் கூட உதவமாட்டேன்' என்கிறானே என்பது பேச்சுவழக்கு. வீயும் சமயம் - சாகும் நேரம். வீதல் - சாதல், அழிதல், கெட்டுப்போதல். இதனைக் காட்டி, வழக்கிலும் இருக்கும் இது அருஞ்சொல்லா எனக் கேட்கின்றார் மூதறிஞர் வ.சுப.மா.

எலிப்பொறியிலுள்ள பொறிதானே ஐம் பொறியிலும் உளது என்பார் அவர். 'போடா, பொறிகெட்டவனே' என இன்றும் சினத்துடன் கேட்கின்றார்கள் அல்லவா? பொறி - உள் வாங்கும் கருவி, கவ்விப்பிடிக்கும் கருவி 'புரவி எடுப்பு' - ஒரு கிராமத்துத் திருவிழா. புரவி - குதிரை. இவ்வாறு வழங்குமிது எவ்வாறு அருஞ்சொல்லாகும் என்பார் அவர்.

மிகவும் நுட்பமாய்த் தேடிப் பார்த்தால் பல சொற்கள் அருஞ்சொற்களல்ல என்று தோற்றும், அவை புதியனபோல் தோன்றி, புதுச்சுவை தரும். அதற்குத் தமிழ்ச் சொற்களுடன் நாளும் பழக வேண்டும்.

## 31. மட்டந்தட்டுதல்

ஒரே துறையிலுள்ளவர்கள் அடிக்கடி 'என்னை மட்டந்தட்டப் பார்க்காதே' என்று சண்டையிடுவதைப் பார்த்திருக்கிறோம். தனக்குப் பிடிக்காதவர்கள் கொஞ்சம் உயர்வாக இருந்தாலும் அவர்களை மட்டந்தட்டுவது ஒரு பழக்கம். யாரும் மிஞ்சிவிடக் கூடாதென்று சிலர் மற்றவர்களை மட்டந்தட்டிக் கொண்டே இருப்பார்கள். இந்தச் சொல் எங்கிருந்து வந்தது?

கொத்தனார் 'சித்தாள்களை'ப் பார்த்து முதலில் குறிப்பிட்ட ஓர் இடத்தை மட்டந்தட்டச் சொல்வார். பிறகுதான் அச் சமதரையில் தளம் போடமுடியும். மேடுபள்ளமாயிருப்பதைச் சமதரை ஆக்க, மேடுகளை மட்டந்தட்டுவது, அவரைப் பொறுத்தவரை நல்லதுதான். நிச்சயமாக இந்தச்சொல் அவரிடமிருந்து நாம் பெற்றதுதான். ஆமாம், அவரிடம்தானே 'மட்டப்பலகை' இருக்கிறது. அவரைப் பார்த்து, நாமும் மனிதர்களை மட்டந்தட்டக் கற்றுக் கொண்டதுதான் மோசமானது. ஆனாலும் மட்டப்பலகை இல்லாமலே மட்டந்தட்டும் நாம் அவரைவிடத் திறமையானவர்கள் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

## 32. பூசி மெழுகுவது

கொத்தனார் தரையில் தளம் போட்டதும் பூசி மெழுகுவார். அப்போதுதான், தளம் சொரசொரப்பின்றி வழுவழுவென்றாகும். நடக்க, புழங்க வேண்டுமேல் தளத்தைக் கொத்துக் கரண்டியால் நன்கு சிமிந்தியையோ, சாந்தையோ இட்டுப் பூசி, சிமிந்திப் பாலை ஊற்றி

மெழுகியும் விட வேண்டும். அதனால் சிறிது பளபளப்பும் உண்டாகும். பூசி மெழுகிய பிற்பாடுதான் தளம்போடும் வேலை முடிவடையும்.

நாமும் ஒரு இரகசியத்தை மறைக்க, குற்றங் குறையைப் பிறரறியாமல் செய்ய வாய்ப் பேச்சாலேயே பூசி மெழுகி விடுவோம். அமைச்சர்கள் மீது ஊழல் புகார்கள் என்று கேட்டால், முதலமைச்சர் சரியாகப் பதில் சொல்லாமல் பூசி மெழுகிவிடக்கூடும். பூசிமெழுகும்போது தூசி தும்புகள்,சிறுகற்கள் யாவும் உள்ளே போய் மறைந்து மேலே சமமாகவும் நன்றாகவும் தெரிவதுபோல், குற்றங்குறைகளை அமிழ்த்த, மறைக்க, அழுத்திவிட, உலகக் கண்களுக்குத் தெரியாமல் போக்கிவிடப் பூசிமெழுகும்' பேச்சுப் பயன்படுகிறது. ஆனாலும் உண்மையையும் உள்ளே வைத்துப் பூசி மெழுகுவது தான் ஆபத்து; என்றேனும் ஒரு நாள் வெடிப்புத் தோன்றாமல் போகாது.

## 33. மழுப்புதல்

ஏதாவது கூர்மையான கேள்வி கேட்டால், சிலர் அதை மழுப்பிவிடுவார்கள். பூசி மெழுகுவது போன்றது தான் இதுவும். ''உங்களுடைய அரசியல் வாழ்க்கையில் பொய்யே பேசியதில்லையா? நீங்கள் கட்சிக்காக இலஞ்சம் வாங்காவிட்டாலும் அன்பளிப்பாக வாவது வாங்கியதில்லையா?'' என்றெல்லாம் வினவினால் சிலர் இலேசாகச் சிரித்து, சரியான பதில் சொல்லாமல் மழுப்பி விடப் பார்ப்பார்கள்.

கொத்தனார் திண்ணை ஓரத்தையோ, சிறுசிறு நுண்ணிய வேலைப்பாடுகள் செய்யும்போதோ சில பகுதிகளைக் கூராக்கும்படியும், சிலவற்றை மழுப்பி விடும்படியும் தம் வேலையாட்களிடம் கூறுவார். 'அந்த ஓரத்தை இன்னும் கொஞ்சம் மழுப்பு' என்பார். அவர் நல்லதற்கு மழுப்பச் சொல்வதைப் பார்த்து நாம் உண்மையை மறைக்கப் பேசி மழுப்பினால், அதற்கு அவரென்ன செய்வார் பாவம்? இப்போதெல்லாம் 'மழுப்பல்' தொழில் கொத்தனாரை விட, கற்றவர்களிடம்தான் அதிகம் என்று பேசிக் கொள்கிறார்கள்.

## 34. கட்டாயம்

கட்டாயக்கல் வரிசை இரண்டு சுவர்கள் கூடுமிடத்தில் அடிப்படை மேல் கட்டும் கல் வரிசையாகும். கட்டு + ஆயம் + கல் எனப் பிரியும். இதில் கீழே அடிப்படையில் கட்டும் ஆயத்தில் குறுக்கு நெடுக்காக வைக்கும்போது இடைவெளி இல்லாமல் வைக்கும் கல்லே கட்டாயக்கல். அது சரியாக, அசையாமல் இறுக்கமாக மிகச் செறிவாக ஒன்றோடொன்று பொருந்தும்படி கல்வரிசை அமையப் பயன்படும். இல்லையென்றால் சுவரின் மூலையில் விரிசல் கண்டு, சுவர் வலுப்படாது போய்விடும். எனவேதான் கட்டாயக்கல் (Corner-stone) வைப்பதில் மிகக் கவனமாக இருக்கவேண்டுமென்று கருதப்பட்டது. அது முக்கியமாக இன்றியமையாது செய்யவேண்டியதாகும். எனவே இவ்வாறு இடைவெளி தோன்றாமல் வைக்கும் கல்லே கட்டாயக் கல் ஆகும். அது மிக இன்றியமையாத

கல்லென்பது கருத்து. குறுக்கும் நெடுக்குமாய்ச்செறிவுபட வைப்பது கட்டாயக்கல் எனப்படும். ஒரே நீளமாய்க் கல்லை வைத்துக் கட்டுவது நெட்டாயம் எனப்படும்.

கூரை மேல்பகுதி கூடுபோல் அமையக் கட்டுவதை 'மோந்தாயம்' என்பர். அதில் வரிசையாக அடுக்கிப் பொருத்தும் நீளக்கட்டைகளை 'வரிச்சு' என்பர். அடித்தளம், முதல்தளம், இரண்டாம்தளம், கால்கோள், அடிப்படை, நிலைமட்டம், நெற்றிமட்டம், மேற்கூரை முதலான இப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான தொழிற் களக் கலைச் சொற்கள் வழக்கிலிருந்தும் பொருளிழந்து வருகின்றன. புதிய ஆங்கிலச் சொற்கள் அந்தந்த இடங்களில் புகுந்து கொள்வதால் இந்த நிலை ஏற்படுகிறது. ஆங்கிலம் கற்ற பொறியாளர்கள் புகுந்தபிறகு, பவுண்டேசன், லிண்டல் போலப் பல மிகுந்து விட்டன. இவ்வகைத் தமிழ்ச் சொற்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தொகுப்பது கட்டாயமாகச் செய்ய வேண்டிய பணி அல்லவா?

தமிழர்களை மேடை ஏறி வாய் கிழிய, தொண்டை வறளக் கத்தச்சொல்லுங்கள். தமிழை வாழ்த்தி மணிக் கணக்கில் சொற்பொழிவு ஆற்றுவார்கள். இப்படிப்பட்ட பயனுள்ள பணியைச் சொன்னால், ஒதுங்கிப் போய்விடுவார்கள்.

## 35. தூற்றுதல்

பயிர்களை அறுவடை செய்து, பொலி தூற்றும் போது வேண்டாதனவெல்லாம் பறந்து புறத்தே போய்விழும்; நெல்மணிகள் பிரித்தெடுக்கப்படும். இந்த

உழவுத்தொழிலிலிருந்து தான் 'அவன் கண்டபடி தூற்றுகிறான்', 'இப்படி ஒருவனைப் பற்றிப் பழி தூற்றலாமா?' என்பன போன்ற வழக்குகள் தோன்றியுள்ளன. புகழ் பரப்புதலைத் தூற்றுதல் என்று குறிப்பதில்லை. தூற்றும்போது வேண்டாதவைகள்தான் காற்றில் கலந்து வெளியில் பறக்கின்றன. அதுபோல உலகிலும் குற்றம் குறைகளே தூற்றப்படுகின்றன. 'போற்றுபவர் போற்றட்டும்; புழுதிவாரித் தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்' என்பார் கண்ணதாசனும்!

குமரகுருபரர் தம் நீதிநெறி விளக்கத்தில் (20) ''பிறர் பிறர் சீர் எல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காக்க'' வேண்டும் என்பார். பிறரது சிறப்பைப் பரப்ப வேண்டும்; அவர் சிறுமையை வெளித்தெரியாமல் காக்கவேண்டுமாம். 'துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்' என்றார் திருவள்ளுவர். நண்பர்களையே பழிகூறித் தூற்றுவார்களாம். இன்றோ பிறர் சீர் எல்லாம் மறைத்து, அவர் சிறுமைகளையே உலகறியத் தூற்றுகிறார்கள்!

உழவன் தூற்றுவதால் மணிகள் குவிந்தன; மனிதன் 'தூற்றும்' போது சிறுமைகள் குவிந்தன. 'தூற்றுதல்' என்பதற்கே 'குறைகளைப் பரப்புதல்' என்று பொருளாகி விட்டது.

## 36. மலை ஏற்று

வட்டார வழக்கு என்பது பேச்சுத் தமிழில் ஓரிடத்திலோ, ஒரு சமுகத்திலோ மட்டும் வழக்கிலிருப்பது. புதுவடிவம் அல்லது புதுப்பொருளில் வழங்கும்.

ஆங்கிலத்திற் போல மரபுத் தொடர்களை (Idioms and Phrases) நாம் பேச்சு வழக்கில்தான் மிகுதியாகக் காணலாம். அவை இலக்கியத்தில் கற்பனை வளத்தை மிகுதிப்படுத்தவும் சிறந்த இலக்கிய உத்தியாகவும் பயன்படும். 'விளக்கை அணை' என்று கிராம மக்கள் கூறமாட்டார்கள். 'விளக்கை நல்லா வை', 'விளக்கை மலையேற்று' என்பார்கள். இத்தொடர்கள் மக்களின் பண்பாடு. நாகரிகத்தையும் காட்டுவன. இவற்றுக்காகத் தனி அகராதிகள் ஆங்கிலத்தில் உண்டு. தமிழில் முழுமையான, பெரிய அகராதிகள் இன்னும் வெளிவரவில்லை.

இத்தகைய அழகான 'குறியீட்டுச் சொற்கள்' - 'படிமங்கள்' 'மரபுத்தொடர்கள்' தமிழில் பல்லாயிரம் உள்ளன. இவையும் தொகுக்கப்பட வேண்டும்.

## 37. கட்டவிழ்த்து விடுதல்

'கூட்டத்தினர்மேல் காவல்துறைப் பட்டாளம் கட்டவிழ்த்து விடப்பட்டது' என்று தலைப்புச் செய்தி. 'சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது; திருட்டும் கொள்ளையும் கட்டவிழ்த்து விடப்பட்டு விட்டன. மக்கள் திகிலடைந்து உள்ளார்கள்' என்றும் செய்தி வெளியிடப்படுகிறது.

தொழுவத்தில் கட்டிக்கிடக்கும் மாடுகளைக் கட்டவிழ்த்து விட்டால், அவை நாலா பக்கமும் சிதறி ஓடும். வண்டியில் பூட்டிய மாட்டைக் கட்டவிழ்த்து விட்டால் பிறகு தடத்திலேயே போகின்ற நிலை ஒழிந்தது. எங்கு வேண்டுமானாலும் தறிகெட்டுத் திரியலாம். கட்டுத் தறியிலிருந்து மாட்டை அவிழ்த்து

விட்ட நிலைதான். 'தறிகெட்டநிலை'. இன்று 'தறிகெட்டுப் போச்சு' என்கிறோம். இவை எல்லாம் கட்டுப்பாடற்ற நிலையைக் காட்டவந்த சொற்கள். ஆடுமாடு மேய்க்கும் தொழிலிலிருந்து இன்று சட்டப் பேரவைக்குள்ளும் 'கட்டவிழ்த்த நிலை' புகுந்துவிட்டது. அதனால் நம் அரசியல் 'தறிகெட்டுப் போய் விட்டது.

## 38. சரமாரி

சரமாரியாகக் கேள்வி கேட்கிறார்கள் என்றாலும் சட்டப்பேரவைகளில் யாரும் சரியாகப் பதில் சொல்வதில்லை. சரம் - அம்பு, மாரி - மழை - அம்பு மழைபோல் கேள்விக் கணைகளைத் தொடுப்பதை இது குறிக்கிறது. அன்று போரில், சரமாரி பொழிந்தார்கள்; இன்று விவாத மேடைகளில் பட்டிமன்றங்களில் சரமாரியான கேள்விக்கணைகளைத் தொடுக்கிறார்கள். சரம் - பூச்சரம் போல, அடுத்தடுத்துத் தொடுப்பது.

## 39. கொட்டம்

பிள்ளைகள் ஆடிப்பாடி ஒரே ஆர்ப்பாட்டமாய் இருக்கும் போது இப்படிக் 'கொட்டம் பரப்புகிறார்களே' என்பதுண்டு. காது செவிபட ஒலி பெருக்கிகளை வைத்துப் பக்கத்துத் தெருவில் ஏதும் நிகழ்ச்சிகள் நடத்தினால் 'கொட்டமடிக்கிறதைப் பாருங்கள், குடியிருக்க விடமாட்டார்கள் போலிருக்கிறதே' என்று வருத்தப்படுவதைப் பார்த்திருக்கிறோம். சிலர், இவர்கள் ''ஆடுகிற ஆட்டத்தைப் பார்த்தீர்களா? இவர்கள் கொட்டத்தை அடக்க வேண்டும்'' என்று கண்டிப்பாகக் கூறுவார்கள்.

கொட்டம் என்பது கொட்டு + அம்; அதாவது கொட்டி ஆடும் ஆட்டம். 'கொட்டு' - தோற்கருவிகளைக் கொட்டி முழக்குவதால், அவ்வாறு இசைக்கும் கருவிகளுக்கும் இசைப்பதற்கும் 'கொட்டு' என்று பெயர். 'அங்கே என்ன? கொட்டு கேட்கிறதே' என்பார்கள். வெற்றி பெற்றவர்கள் தங்கள் மகிழ்ச்சியைக் 'கொட்டு' மூலம் உலகறிய முழக்கி மகிழ்வார்கள். 'கொட்டாட்டப்பாட்டு' என்பது நிருத்த கீதவாச்சியம். கைகொட்டி ஆடுவது, இசைக் கருவிகளைக் கொட்டி முழக்கி ஆடுவது யாவும் இதில் அடங்கும். 'கொட்டம்' - கொட்டி முழக்கி ஆடுதல் - அந்தக் காலத்தில் கொற்றம் (வெற்றி) பெற்றவர்கள் 'கொட்டம்' ஆடுவார்கள். அதைப் பார்த்த, கேள்விப்பட்ட எதிரிகள் 'இவர்கள் கொட்டத்தை அடக்கவேண்டும்' என்பார்கள். இன்றும் அரசியலில்தான் 'கொட்டமடிப்பதும்' 'கொட்டத்தை அடக்கத் துடிப்பதும்' நடைபெற்ற வண்ணம் உள்ளன.

## 40. இசைக்கலை பயிலாத இசைக் கலைஞர்கள்

உங்களுக்குத் தெரியுமா? இசைக் கலையில் பயிற்சி பெறாமலே அதற்குரிய பல கலைகளைத் திறமையோடு வாசிப்பவர்கள் இருக்கிறார்கள். சிலர் 'ஒத்தூதுவதில்' மிக வல்லவர்களாயிருப்பார்கள்; சிலர் நன்றாகச் சுருதி பிசகாமல் தாளம் போடுவார்கள்; சிலர் எப்போதும் 'ஜால்ரா'த் தட்டிய மணியமாயிருப்பார்கள்; ஒருசிலர் தங்களைப் பற்றித் தம்பட்டமடிப்பார்கள்; சிலர் பேச்சு அடிக்கடி 'அபசுர' மாயிருக்கும். ஆனால் இவர்கள் யாரும் இசையை முறையாகக் கற்காமலே

அன்றாட வாழ்க்கையில் - பேச்சில் இப்படித் தங்கள் திறமையை வெளிப்படுத்துகிறார்கள்.

இவ்வாறே தமிழில் வழங்குகின்ற தொழிற்களக் கலைச்சொற்களையும் மரபுத் தொடர்களையும், இணைச் சொற்களையும், அடுக்குத் தொடர்களையும், இரட்டைக் கிளவிகளையும், வட்டார வழக்குச் சொற்களையும் தொகுத்தால் தனித்தனி அகராதி ஆகும். பல நூறாயிரம் சொற்கள் தேறும். யார் செய்வது? ஆண்டுவிழா என்றால், மேடை என்றால் ஓடும் தமிழன், செயற்பணி என்றால் புறமுதுகிட்டு ஓடுவதில் வல்லவன் அல்லவா?

குறியீடுகளாக, படிமங்களாக உள்ள அருத்தத்தோடு பயன்படுத்தப்படுபவை மிக அழுத்தமான மெய்ப்பாட்டுடன் கருத்தை வெளிப்படுத்த உதவுகின்றன. அப்போதுதான் சுவைப்பாவனை - உள்மன ஆழ்நிலை உணர்வு புறத்தே தெரிவிக்கப்படுகிறது. ''அடுத்த தெருவில் இரண்டு நாள்களாக ஆடிப்பாடி ஆரவாரம் செய்கிறார்கள்'' என்று சொல்வதற்கும் ''அடுத்த தெருவில் இரண்டு நாளாக் கொட்டமடிக்கிறார்கள்'' என்பதற்கும் எவ்வளவு வேறுபாடிருக்கிறது என்பதைப் பயன்படுத்திப் பார்த்தால்தான் தெரியும்.

## 41. செலவில்லாமல் காது குத்துவது!

யாராவது நம்மை ஏமாற்றுவதுபோல் பேசினால், ''சும்மா காது குத்தாதே'', ஏற்கெனவே துளை இருக்குப் பாரு'' என்று எதிர்த்துப் பேசுகிறோம். ஒரு இசுலாமியனை இந்துவாக ஏமாற்றி, மாற்றிவிட

முயல்வதை முதலில் இது குறித்தது. ''எனக்கு என்ன குல்லாப் போடப் பார்க்கிறாயா?'' என்று சீற்றத்தோடு கத்துகிறோம். முதலில் ஓர் இந்துவை மடக்கி முசுலீமாக்க முயன்றபோது வந்த சொல் இது.

''என்னை ஏமாற்றி மொட்டை அடிக்கப் பார்க்கிறான்'' என்னும்போது, முற்காலத்தில் ஒருவனைச் சமணனாக்கிய தந்திரத்தைச் சுட்டியதே, இன்று செலவில்லாமல் பலர் மற்றவர்களை மொட்டை அடிக்கும் தந்திரத்தைக் குறிக்கிறது. ''நாமம் போட்டு விட்டான்'' என்பதும் ''பட்டை அடித்து விட்டான்'' என்பதும் கட்டாயப்படுத்திச் செய்யப்பட்ட வைணவ, சைவசமய மாற்றங்களையே குறிக்கின்றன. ''காதிலே பூ வைக்காதே'' என்பதும் பிற சமயத்தவனைமாற்றும் முயற்சியைக் குறிக்கிறது. இவையெல்லாம் காலங்கடந்த காலத்தில் இன்று வெறுமனே ''மரபுத் தொடர்களாய்'' விட்டன. ஏமாற்றுதல், தந்திரம் செய்து கவர்தல் என்ற பொதுப் பொருளில் மட்டுமே வழங்குகின்றன.

முன்பு ஒருமுறை கி.வா. ஜகந்நாதன் அவர்கள் இத்தொடர்களின் பொருளை இவ்வாறு விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய ''மரபுத் தொடர்கள்'' (Idioms and phrases) தமிழில் ஆயிரக்கணக்கில், தனி அகராதி தொகுக்குமளவுக்கு வழங்குகின்றன. யார் தொகுப்பது, யார் வெளியிடுவது என்பதைவிட, அப்படி முயன்று செலவழித்து வெளியிட்டால் எத்தனைபேர் வாங்கிப் படிப்பார்கள் என்பதுதான் பெரிய பிரச்சினையாக உள்ளது. வெளியிட்டவனை ''மொட்டையடித்து

விடுவார்கள்'' என்னும்போது, நான் ஒன்றும் உங்களுக்குக் ''காது குத்தவில்லை''; உண்மையைத்தான் சொல்கிறேன்!

''உங்களுக்கென்ன வெளியிடுங்கள்'' என்று நீங்கள் என் காதில் பூ சுற்ற நினைக்கலாம். அதை நம்பி நான் ஆற்றில் இறங்க மாட்டேன். ஏனெனில் இந்தத் தமிழர்களை நம்பினால், நம்மை நட்டாற்றில் விட்டுவிடுவார்கள்! நம் 'மரபுத்தொடர்'ச் செல்வம் விளங்குகிறதா?

## 42. கடலோடிகளின் முன்னோடிகள்

'கட்டமரம்' (கட்டுமரம்) என்ற சொல்லும் 'Catamaran' என ஆங்கில வழக்கிலேறி, அம்மொழி அகராதிகளில் புகுந்துள்ளது. கடல் கடப்பதில் தமிழர்கள் முன்னோடிகளாக இருந்ததால்தான் 'கட்டமரான்' என இச்சொல் அங்கு சென்று கலந்துள்ளது. அதன் பிறகு புணை, மிதவை, தெப்பம், நாவாய், கலம், வங்கம் எல்லாம் கண்டு வளர்ந்தாலும் 'கட்டுமரம்' முன்னதாகப் பரவியது போல் பரவவில்லை. நம் கட்டுமரம் பாய்கட்டிய மரமாக அதாவது பாய்மரக் கலம் எனப்படும் நாவாயாக வேகமாக வளர்ந்து 'கலங்கள்', மிகப்பெரிய கப்பல் எனத்தகும் வங்கம் கண்டோம். 'வினைமாண் நன் கலம்' என அழகழகான, பெரிய பாய்மரக் கப்பல்களை அப்போதே செய்யத் தொடங்கிவிட்டோம். நம்மைப் பார்த்தே கிரேக்கர்களும் உரோமானியர்களும் 'வினைமாண் நன்கலம்' பல கண்டனர்.

சந்தன மரம் தமிழகத்திலும் கேரளம் மற்றும் கருநாடகத்திலும் மிகுதியாகக் காணப்படுவது. 'சாந்தில் தொடுத்த தீந்தேன்' எனச் சந்தன மரம் 'சாந்து' என்று நற்றிணை முதற்பாடலில் இடம்பெறும். தமிழில் காணப்படும் சந்தனச் சொல் ஆங்கிலத்தில் (Sandal wood) என்று வழங்குகிறது. இதிலிருந்து தெரியும் உண்மை என்ன? நம்மிடமிருந்து பொருள்கள் போனால், நம் சொற்களும் போகும் என்பது தெரிகிறதல்லவா?

நம்மிடமிருந்து பொருள்கள் ஏற்றுமதியானால் நம் சொற்களும் அங்கே ஏறும். நாம் பிறர் உருவாக்கிய பொருள்களையே வாங்கிப் பயன்படுத்தினால், அச்சொற்களும் தாமாக வந்து நம் மொழியில் ஏறும். இதைத் தடுத்து நிறுத்த நாம் வளரவேண்டுமே தவிரப் பிறரைப் பழித்துப் பயனில்லை. உலகப் பொருள்களை இறக்குமதி செய்யும்போது, பொருள்களைமட்டுமா, சொற்களையுமல்லவா இறக்குமதி செய்கிறோம்?

## 43. ஏற்றுமதியான நாகரிகம்

தமிழில் 'கறி' என்ற சொல் மிளகைக் குறித்தது. அந்தக் காலத்தில் குழம்பு, இரசம் போன்றவற்றில் மிளகைத்தான் பயன்படுத்தினார்கள். பின்பு மிளகுபோல் குழம்பில் சுவை சேர்க்கப் பயன்பட்ட, புதிதாக வந்த காயை மிளகாய் என்கிறார்கள். சங்க காலத்தில் உலகெங்கும் மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டது. யவனர்கள் பொன்னைக் கொடுத்துவிட்டு மிளகை வாங்கிக் கொண்டு பாய்மரக் கப்பல்களில் சென்றதைச் சங்கப் பாடல்களால் அறிகிறோம். இதனால் 'கறி' என்ற சொல்லும் பிற மொழிகளில் இடம் பெற்றது.

ஆங்கிலத்தில் எந்த அகராதியிலும் 'Curry' என்ற சொல்லைப் பார்க்கலாம். இச்சொல் நம் நாகரிகத்தின் சிறப்பைக் காட்டுவது போல் பல மொழிகளிலும் சென்று இவ்வாறு வழங்கப்படுகிறது.

ஆங்கில அகராதிகளில் 'கூலி' (coolie, cooly) என்ற சொல்லையும் தவறாது காணலாம். 'கூலம்' என்ற சொல் தானியத்தைக் குறிக்கும். அதனையே வேளாண்மை வேலைக்குத் தரும் பணமாகக் கொடுத்ததால், கூலி வந்தது. எந்த வேலையாயினும் காசுக்கு வேலை செய்து அங்ஙனம் வாங்கும் பணத்தைக் 'கூலி' என்றனர். பின் அங்ஙனம் வேலை செய்பவனையே குறித்தனர். திருவள்ளுவர் 'மெய்வருத்தக்கூலி தரும்' என்றது பயன்தரும் என்ற பொருளிலாகும். இந்தச்சொல்லும் ஆங்கில வழியாக எல்லா மொழிகளிலும் சென்று வழங்குகிறது. கறி, கூலி போன்ற சொற்களுக்குக் கீழே (Tamil) என்று அடைப்பில் போட்டிருப்பதை 'சேம்பர்ஸ்' அகராதியில் பார்க்கலாம். 'வெளிநாட்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் உடலுழைப்பு வேலைக்காக அழைத்துச் செல்லப்பட்ட வேலையாட்கள், வெளி நாட்டவர்க்கு அடிமை வேலை பார்க்கும் இந்திய வேலைக்காரர்கள்' எனச் இச் சொல்லுக்கு ஆங்கில அகராதியில் பொருள் எழுதப்பட்டிருக்கும். ஏற்றுமதியான இச்சொல் நம் நாகரிகம் இறங்கி வந்ததைக் காட்டுகிறது.

## 44. 'கயிறு' திரிப்பது

'சும்மா கயிறு திரிக்காதே' என்கிறோம். 'மணலைக் கயிறாகத் திரிக்க' வல்லவர்களைப் பற்றிப் பேசுகிறோம். உண்மையான கயிறு திரிக்கத் தென்னைநார்

- தேங்காய் நார் மிகவும் பயன்பட்டிருக்கிறது. கல்வெட்டுகளில் 'கயர்' காணப்படுகிறது. உலக வழக்கில் 'கயற்' (உ), வயற் (உ) என்று குற்றியலுகரத்தை உச்சரிக்கும் பழக்கம் உளது. மலையாளத்தில் இப்பேச்சுவழக்கு வடிவமே காணப்படுகிறது. தகழி எழுதிய ஞானபீடப் பரிசுபெற்ற நாவலுக்குக் 'கயறு' என்று பெயர். இங்கிருந்து இத்தொழில் பிற நாடுகளில் பரவியதால், ஆங்கில அகராதிகளில் காயிர்-coir என்ற சொல் (Coconut Fibre) இன்றும் காணப்படுகிறது. சங்கப் பாடல், திருக்குறள், சிலம்பிலெல்லாம் காணப்படும் கயிறு நம் சேரநாடு வழியாக இவ்வாறு 'காயிர்' ஆகி வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகியுளது. சில உதிரிச் செய்திகளை வைத்துக் கொண்டு பொய்க் கதையாக வடிவம் கொடுப்பதையே 'கயிறு திரிக்கிறான்' என்று குறிப்பிடுகிறோம். கேடு தருமாறு தீங்காகத் திரிப்பதுதான் குற்றம். வெறும்நாரைக் கயிறாகத் திரித்தது உலகிற்கு ஏற்றுமதியானது. ஒரு பொய்யைப் பல பொய்யாய்த் திரிப்பது, அவரவர் 'உற்பத்தித்திறன்' ஆனது.

## 45. கணக்குவழக்கு

கணக்குவழக்கு என்பது ஓர் இரட்டைத் தொடர். வீட்டில் அடிக்கடி 'கணக்குவழக்குப்' பார்க்கவேண்டும் என்பார்கள். கடையில் பங்குவைத்திருந்தால் கணக்கு வழக்குப் பார்ப்பதில் சில மனவேறுபாடுகள் வரக்கூடும்.

பணத்தை அள்ளி இறைக்கிறார்கள், 'ஒரு கணக்கு வழக்கே' இல்லை என்பார்கள். மிகக் கூடுதல், எண்ண முடியாதது, எல்லையற்றது என இது பொருள் வளர்ச்சி பெற்றுவிட்டது.

தொன்மைமிக்க காலத்தில் 'கணக்கு' என்பது நீதி நூல்களைக் குறித்துளது. அன்றே காலத்தைக் கணக்கிடுவதையும் குறித்துளது. நகர்தோறும், அரண்மனைதோறும் 'நாழிகைக் கணக்கர்' இருந்துள்ளனர். அவர்கள் பல்வேறு நெறிமுறைகளில் நாழிகையைக் கணக்கிட்டு, முரசறைந்தும் பிறவாறும் மன்னவனுக்கும் மக்களுக்கும் அறிவித்துள்ளனர். 'நள்ளிரவிலும் நாழிகைக் கணக்கர் காலக் கணக்கைக் கணக்கிட்டு விழித்திருப்பது போல, என் கண்கள் துயிலாவாயின' என ஒருதலைவி (காவலர் கணக்கு ஆய் வகையின் - குறு.261) கூறுகிறாள். கணக்காயன் தத்தன் (குறுந். 304), மதுரைக் கணக்காயனார் (அகம். 27) என வருவன ஆசிரியர்களைக் குறிக்கின்றன.

'கணக்கு' என்பது பல பொருள்தரும் ஒருசொல். முதலில் கணக்கு வழக்கு எனும் சொல் முறைமை, நீதி, எனும் பொருளிலும் வழங்கியுளது. 'அடியேன்கண் கொள்வதே, கணக்கு வழக்காகில்' எனத் தேவாரத்தில் வருகிறது'. பதினெண் கீழ்க்கணக்கு என்பது பதினெட்டு நீதி நூல்களின் தொகுப்பேயாகும். அதில் வரும் அகம், புறம் பற்றியன சிறுபான்மையே. சில அடிகளை மட்டும் கொண்ட, வெண்பா யாப்பில் ஆனதால் 'கீழ்க்கணக்கு' என்றனர். பத்துப் பாட்டு, எட்டுத்தொகையைப் பதினெண் மேற்கணக்கு என்பது வழக்கிலில்லை. சிலர் கீழ் என்றால் மேல் வேண்டுமே எனக் கூறுவது அது. உண்மையில் சிறுசிறு பாடல்களைக் கொண்ட நூல்களின் தொகுப்பு என்பதே, 'கீழ்க்கணக்கு' என்பதன் பொருளாகும்.

மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் 'மொல்லை மாறிப் பயலே' எனத் திரித்து வழங்கினாலும் இது 'முல்லை மாறி' எனும் பழஞ்சொல்லே என விளக்குவார்.

### முடிச்சு மாறி

அந்தக் காலத்தில் பொன்னையும் பொருளையும் துணியில் பொதிந்து, முடிந்து இடுப்பில் செருகி வைத்துக் கொள்வார்கள். சட்டை போடாத காலம் அல்லவா அது.

துணியில் முடிந்துவைப்பதால்தான் 'பொற்கிழி' என்று கூறப்பட்டது. கிழி-துணி, துணிப்பை. பலர் பொற்கிழிப் பரிசு என்றால் இது தெரியாமல் பொன்னால் 'கிளி' செய்து கொடுத்தார்களா என்று கேட்கின்றார்கள். அவர்கள் கிழியைக் 'கிளி' என்று நினைத்துக் கொண்டுவிட்டார்கள்.

திருவிழாக் காலங்களில் கூட்டத்தில் முடிச்ச விழ்க்கிகளும் முடிச்சுமாறிகளும் அதிகமாக ஊசலாடுவார்கள். பிறருடைய முடிச்சை அவிழ்த்துப் பொன்னை எடுத்துப் போய்விடுவார்கள். முடிச்சை அவிழ்த்து, அதில் வேறு எதையாவது வைத்து ஏமாற்றிவிடுவார்கள். அல்லது, வேறொரு வெற்று முடிச்சை வைத்துவிட்டுப் போய்விடுவார்கள்.

இன்று நாம் நம் பையில் வைத்துச் செல்லும் பணத்தைப் பேருந்தில் சிலர் தந்திரமாக எடுத்துச் சென்றுவிடுகின்றனர். அவர்களைப் 'பிக்பாக்கட்' என்பர். கா.அப்பாத்துரையார் தம் ஆங்கிலம் - தமிழ்க் கையகராதியில் '**Pick-Pocket**' என்ற சொல்லுக்குப் பொருளாக முடிச்சுமாறி, முடிச்சவிழ்க்கி என்ற சொற்களையும் காட்டியுள்ளார்.

## 47. பெட்டி

''பணப்பெட்டியைக் கல்லாப்பெட்டி' என்கிறோம். 'கல்லா' என்ற சொல் தமிழ்ச்சொல்தானா?'' முகமதியர் படையெடுப்பிற்குப் பின் உருது, அராபி, பெர்சியன் மொழிச் சொற்கள் பல தமிழிற் கலந்தன. கல்லா என்பது பெர்சியச் சொல். பணப்பெட்டி, பணப்பேழை, கைப்பெட்டி என்று தமிழிற் கூறுவர்.

'பெட்டி' என்பது முதலில் ஓலைப்பெட்டியைக் குறித்து, பின்பு மரப்பேழை முதலியவற்றையும் சுட்ட உலக வழக்கில் காணப்பட்டு வந்துள்ளது. விருப்பத்திற்குரிய ஆடை அணிகளையும் பொன், மணிகளையும் வைத்துப் பாதுகாக்கும் பேழை பெட்டகம் எனப்பட்டது. மணப்பெண்ணுக்கு வரிசைகள் கொண்டுசெல்லும் பெட்டி பெட்டகம் எனப்பட்டதாக தமிழ்ப் பேரகராதி குறிக்கிறது. பெட்டல் - விரும்புதல். அதிலிருந்து வந்ததே பெட்டகம். உலகியலில் பெட்டகப்பெட்டி எனவும் ஒரு வழக்குண்டு.

பெட்டிப்புல் ஒருவகைக் கோரைப்புல். கோரைப் புல்லால் மிடையப்பெற்றதே பெட்டி எனப்பட்டது. 'வெள்ளி'மீனைப் பார்த்து ''தெற்கே சாய்ந்தால் தெருவெல்லாம் பெட்டி, வடக்கே சாய்ந்தால் வயலெல்லாம் பொன்'' எனக் கூறுவர். தெருவெல்லாம் பஞ்சத்தால் ஓலைப்பெட்டியை வைத்துச் சோறு கேட்பதையே இப் பழமொழி குறிக்கிறது. மூடியுள்ள கூடையையே பெட்டி என்றனர். அதனால் மரம், இரும்பாலான மூடியுள்ள பேழைகளும் பெட்டி எனப்பட்டன.

இன்று சிற்றூர், பேரூர் எங்கும் பெட்டிக்கடை ஆயிரக்கணக்கில் காணப்படுகிறது. வெற்றிலை பாக்குக்கடை, பீடி சிகரெட்டுக்கடை என்பதை விட, பெட்டிக்கடை எனும் வழக்காறுதான் அதிகம். ஆங்கிலத்தில் Petty Shop என்பதுதான், இங்ஙனம் தமிழில் நிலைபெற்றுவிட்டது. ஆங்கிலத்தில் 'பெட்டி' (Petty) என்பது சிறியது எனப் பொருள்படும். பெட்டி போன்ற அமைப்புடைமையால்தான் இதைப் 'பெட்டிக்கடை' என அழைக்கிறோம் என்றால், ஆங்கிலேயர் யாரும் சண்டைக்கு வரப்போவதில்லை!

## 48. சோமாறி

முல்லைமாறி, முடிச்சுமாறிபோன்று 'சோமாறி' என்றும் ஒரு சொல் பேச்சில் வழங்குகிறது. ஒருவர் ஒரு வேலையைச் செய்து அயரும்போது, அவருக்கு மாற்றாகப் பிறிதொருவர் அவ்வேலையைச் செய்தால், அவர் 'சோமாறி' எனப்படுகிறார்.

'அவன் ஒரு சோமாறிப் பயல்' என்னும்போது, இன்று சோம்பேறி என்ற பொருளிலும் ஆள்கின்றனர். இன்றும் பேச்சுவழக்கில் 'எனக்குச் சோமாத்திக்கு ஆளில்லை' என்பார்கள். 'சோர்வை மாற்றிக் கொள்ளுதலே' அது. சோ - வேர்ச்சொல். சோம்புதல், சோர்தல் யாவும் அதிலிருந்து பிறந்தவை. 'என் தங்கச்சியைச் சோமாத்திக்குக் கூட்டிக்கிட்டு வந்தேன்' என்பார்கள். சோர்வை மாற்றுவதால் சோர்வு மாற்றியாகிச் சோமாத்தியாகியதா எனச் சிந்திக்க இடம் தருகிறது.

ஒரு பண்டத்தை ஒரு பாத்திரத்திலிருந்து பிறிதொரு பாத்திரத்திற்கு மாற்றுவதையும் 'சோமாறுதல்' என்ற சொல்லால் குறித்ததாகத் தமிழ்ப் பேரகராதி சுட்டுகிறது. பலர்கூடி ஒரு காரியத்தை மாறிமாறிச் செய்தலும் 'சோமாறுதல்' எனப்பட்டது.

இன்று, திரைப்படத்தில் ஒருவருக்குப் பதிலாகக் குத்துச் சண்டை, குதிரைச்சவாரி செய்வதாகக் காட்டும் 'போலி நடிப்பாளர்களை' (ஒருவரைப் போல நடிப்பவர்கள்) 'டூப்பு' (Dupe) என்பர். இவர்களைச் 'சோமாறிகள்' எனல் இயலாது என்றாலும், ஒருவகையில் இவர்களும் சோமாறிகளாகப் பயன்படுகின்றனர் எனலாம்.

'முல்லைமாறி, முடிச்சுமாறி, சோமாறிகளைப் பார்த்து இன்று அரசியலில் கட்சிமாறிகளும் பெருகி விட்டனர். கட்சிவிட்டுக் கட்சிக்குத் தாவுகின்றவர்களை - நொடிப்பொழுதில் இங்கிருந்து அங்கே போய்க் குதிக்கின்றவர்களைக் 'கட்சிமாறி' என்றாலும் பொருந்தவில்லை என்று 'கட்சிதாவி' எனக் குறிப்பிடக் காண்கிறோம். 'இன்னார் இந்தக் கட்சிக்குத் தாவினார்' என்றல்லவா செய்தி வெளியிடுகிறார்கள். முன்பு 'மாறியவர்கள்' இன்று 'தாவுகிற' அளவு முன்னேறியுள்ளார்கள். எனவே அரசியலில் முன்னேற்றம் இல்லை என்று யாரும் கூறமுடியாது அல்லவா?

## 49. பரியும் புரவியும்

'அவன் எங்கே பரிஞ்சிட்டான்' என்பர். 'எங்கேயும் பரிஞ்சிடாதே' என்றால் ஓடிவிடாதே என்று

கூறுவதாகும். பரிதல் - விரைந்து ஓடுதல். 'காலே பரிதப்பினவே' என்றால் நடை வேகம் தடுமாறுதல். வேகமாக ஓடும் குதிரையும் பரி எனப்பட்டது. ஆனால் 'பரியறது' என்றவுடன், ஓடுவதை எண்ணும் நாம், பாடலில் 'பரி' என வந்தால் ஒரு கணம் திகைக்கிறோம். மாணவர்களுக்கு, பரி - குதிரை எனப் பொருள் சொல்லவேண்டியிருக்கிறது. 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்' என்பது பட்டினப்பாலை *(185)*, கடல்வழியாக இறக்குமதி செய்யப்பட்ட நிமிர்ந்த பெருமிதமான ஓட்டத்தையுடைய குதிரைகள் குறிக்கப்படுகின்றன என்பதை உரையைப் படித்து விளக்க வேண்டியிருக்கிறது. திருவிளையாடல் புராணத்தில் நரி பரியாக்கிய படலம் வருவதால், சிலர் இச்சொற் பொருளை எளிதில் அறிவர். அதுபோல் 'புரவி எடுப்பு' நம்முடைய ஒவ்வொரு கிராமத்திலும் அய்யனார் கோயில்களில் நடைபெறத்தான் செய்கின்றது. ஆனால், அங்கே புரவி - குதிரை என யாருக்கும் பொருள் கூறி விளக்குவதில்லை. குதிரைகளை மண்ணால் செய்து எடுத்துவிடுவதை அவ்வாறு தம்மை அறியாமலேயே படிப்பறிவில்லாத கிராமத்து மக்கள் கூறுகின்றனர். பரியும், புரவியும் அன்றாட வழக்கை ஒட்டியனவே. விரைந்து ஓடுவது பரி. மன்னர்களுக்கு உரியது புரவி. இன்று புரவி தெய்வங்களுக்கு உரியதாகிவிட்டது.

## 50. குட்டு வெளிப்படுகிறது

யான் **தினமணி**யில் எழுதிவந்தபோது, பேராவூரணி சோ. முத்து மாணிக்கம், ''குட்டு வெளிப்பட்டுவிட்டது; குட்டை உடைத்துவிட்டான் என்று வழங்கும்போது

ஒருவனுடைய கமுக்கமான செயல் உலகுக்குத் தெரிந்துவிடுவதைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இச்சொல்லின் வேர் எதுவாக இருக்கும் என விளக்க வேண்டுகிறேன்'' எனக் கேட்டிருந்தார்.

குட்டு-குட்டுகை, இரகசியம், மானம் என்று அகராதி கூறுகிறது.

தலையில் கைமுட்டியால் இடிப்பதே குட்டுவதாகும். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பாடம் ஒப்பிக்காதவனையும் தப்புச் செய்பவனையும் தலையில் குட்டித் தண்டிப்பது அந்தக்கால வழக்கம். முட்டாளாயிருக்கும் மாணவன், அடிக்கடி குட்டுப் படுவான். இதனால், குட்டுப்படுவது அவமானமாகக் கருதப்பட்டது. யாரேனும் இங்ஙனம் குட்டுப்பட்டால், அதை வெளியே தெரியாமல் மறைக்கவே விரும்பினார்கள். அது வெளிப்பட்டபோது இரகசியம் வெளிப்பட்டுவிட்டதே என்று மனமுடைந்தார்கள்.

## 51. 'குட்டுணி' யார்?

குட்டு + உணி - குட்டுண்பவன், அதாவது குட்டுப்படுபவன். அந்தக் காலத்தில் 'குட்டுணி' என்ற ஒருசொல் வழங்கியது. இங்ஙனம் குட்டுப்பட்டு அவமானப்படுபவர்களை அது குறித்தது. அறிவின்றிப் பிறரால் தண்டனைக்கு ஆட்படுபவர்களைக் 'குட்டுணி' என்றார்கள். இவ்வாறே காலப்போக்கில் 'குட்டு' என்ற சொல்லுக்குத் துன்பம், இடர், அனுபவம் என்றெல்லாம் குறியீட்டுப் பொருள்கள் ஏற்படலாயின. விவரம் தெரியாமல் ஒரு தொழிலைத் தொடங்கிவிட்டுத் தவிப்பவர்களைப் பார்த்துக் 'குட்டுப்பட்டால்தான்

புத்திவரும்' எனப் பேசுவார்கள். ஒன்றைத் தொடங்கித் துயரப்பட்டு அனுபவப்படுவதும் இதில் குறிக்கப் படுகிறது. மிகவும் வாழ்வில் அடிபட்டு விட்டவனை 'நல்லாக் குட்டுப்பட்டுவிட்டான்' என்று கூறி இரக்கப்படுவார்கள்.

ஒருவனைத் துன்பப்படுத்திக் கொண்டே யிருப்பதையும் குட்டுவதாகக் கூறுவதுண்டு. ''குட்டக் குட்டக் குனிகிறவனும் முட்டாள், குனியக் குனியக் குட்டுகிறவனும் முட்டாள்'' என்ற பழமொழியில் இக் குறியீட்டுப் பொருளை முழுமையாகக் காணலாம்.

''குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும்'' என்பதும் ஒரு குறியீட்டுப் பழமொழியாகும். கண்டிக்கப்படுதல், தண்டிக்கப்படுதல் எதுவாயினும் நம்மை விட உயர்ந்தவர்களால், தக்கவர்களால் நடந்தால் குறையில்லை. போயும் போயும் நம்மைவிட மட்டமானவர்கள் நம்மைக் கண்டிக்க நேர்ந்தால், அது மிகவும் அவமானமல்லவா?

## 52. அரங்கேற்றத்தில் குட்டுப்படுதல்

முன்னைக் காலத்தில் தமிழ் நூல்களை அரங்கேற்றும் பழக்கம் இருந்தது. நூலைப் படைப்பவர், பிறர் எழுப்பும் ஐயங்களுக்கு விடைகூறி, மனநிறைவை ஏற்படுத்தினால்தான் அந்நூல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில், பிழைபட எழுதுபவர்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டனர். இதை, 'குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டியன் ஈங்கில்லை' என்று தொடங்கும் தனிப்பாடல் ஒன்றால் அறியலாம். தவறு செய்யும் மாணவனை ஆசிரியர் குட்டுவதுபோல்,

பிழைபட எழுதும் நூலாசிரியர்களும் குட்டுப்பட்ட செய்தியை இது காட்டுகிறது.

### குட்டு : மானமும் மறைபொருளும்

ஒருவன் குட்டுப்படுவது மானம் போகிற செய்தி. அது வெளிப்படாமல் இருக்கிறவரை நல்லது. ஒருவர் பெரிய செல்வராக மானம் மரியாதையுடன் வாழ்கிறார். அவரைத் திடீரென்று 'கடத்தல்காரர்' என்று கைது செய்துவிடுகிறார்கள். உடனே உலகம் என்ன சொல்லும்? 'குட்டு வெளிப்பட்டுவிட்டது, பார்த்தாயா?' என்பார்கள். இங்கு குட்டு என்ற சொல் இரகசியம் என்ற பொருளைத் தருகிறது. ஒருவன் 'குட்டுப்பட்ட' செய்தி வெளிப்படுவது, மறைவாக நடந்த செய்தி வெளிப்படுவது என்ற நிலையில் பொருள் தந்து இரகசியம், மறைபொருள் வெளிப்படுவதென்ற பொருளுக்கே போவதைக் கவனியுங்கள். அதனால் மானம் போவதால், மானம் என்ற பொருளையும் அதே சொல் தருவது கருதத்தக்கது.

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இவ்வாறு ஏதாவது 'குட்டு' இருக்கும். அதனால் தான் ஒருவருக்கொருவர் மோதல் வரும்போது 'குட்டை உடைத்துவிடுவேன்' என்று சீறுகிறார்கள். இரகசியத்தை வெடிப்பதுபோல் பலரறிய வெளிப்படுத்துவதால், குட்டைப் 'போட்டு உடைப்பதாகக் கூறுகிறார்கள்.

### 53, குட்டை - குட்டம் - குட்டு

'குட்டம்' என்றால், ஆழம், குளம் என்று பொருளுண்டு. குளங்குட்டை என்ற தொடரில் குட்டை

சிறுபள்ளத்தைக் குறிக்கிறது. குட்டமிடல் - தோண்டுதல் என்று சுன்னாகம் குமாரசாமிப் பிள்ளையின் இலக்கியச் சொல்லகராதியில் காணப்படுகிறது. தலையுச்சியிலும் முன் நெற்றிமேலும் பள்ளம் பறிப்பதுபோல் கைமுட்டியால் அழுத்திக் குத்துவதால், 'குட்டுதல்' வந்திருக்கவேண்டும். இதற்குமேல் வேரைத் தேடுவது ஆழமான ஆராய்ச்சி. சில சமயம் குழ் - குண் - குட் என ஆரம்பித்தால், சொல்பவரின் குட்டு வெளிப்பட்டுவிடக் கூடும். ஏனென்றால், ஒருவரின் மொழியறிவை எடைபோடுகிற செய்தி அது.

## 54. ஐம்பொறியும் ஐம்புலனும்

மெய் (உடம்பு), வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்தும் உலகைக் கண்டு, கேட்டு, அனுபவிக்கும் கருவிகளாதலின் 'ஐம்பொறிகள்' (கருவிகள்) எனப்படும். இவற்றால் அனுபவிக்கப்படுகிற, நுகரப்படுகிற பொருள்கள் - இடங்கள் 'புலம்' எனப்படும். கண்ணால் காண்பது ஒளி, காதால் கேட்பது ஒலி, ஓசை. இவையே புலம் எனப்படுகின்றன. சுவை (நா), ஒளி (கண்), ஊறு (தொடும் உணர்வு - உடம்பு), ஓசை (செவி), நாற்றம் (மணம்-மூக்கு) என ஐம்பொறிகளால் நுகரப்படுவனவற்றை ஐம்புலன்கள் என்பர். ஒளி தரும் பொருள்களும் ஒலி எழுப்பும் பொருள்களும் சுவைக்கப்படுவனவும் முகரப்படுவனவும் தொட்டறியப்படுவனவும் என அனைத்தும் 'புலன்களே' யாகும். புலனடக்கம் என்பது ஐம்பொறிகளையும் அவை சென்று துய்க்கும் புலன்கள்மேல் செல்லவிடாமல் அடக்குவதாகும்.

**புலம் - புலமை - புலவர்**

ஐம்பொறிகளால் அறியும் புலனறிவே ஒருவருக்கு முதன்மையான கல்வியாகும். வெறும் புத்தகப் படிப்பு மட்டும் கல்வி ஆகாது. நூல்களைக் கண்ணால் பார்த்துப் படிப்பதாலும் காதால் கேட்டுப் பயில்வதாலும், பெரிதும் நூற்கல்வியே கல்வி எனப்பட்டது. எனினும் ஐம்பொறிகளாலும் கற்கும் கல்வியின் பரப்பை மறத்தல் கூடாது. இதனால் நூலறிவும் புலனறிவும் 'புலம்' எனப்பட்டன. அதனையுடையார் புலவர் எனப்பட்டனர்.

'புலப்படுகிறதா' என்று கேட்டால் கண்ணுக்குத் தெரிகிறதா, கருத்துக்கு விளங்குகிறதா, விடை அறியப்படுகிறதா என வினவுவதாகும். 'புலப்பட வில்லை' என்றால் கண்ணுக்குத் தென்படவில்லை. அறிவுக்கு அகப்படவில்லை, விடை தெரியவில்லை என்றாகிறது. புலப்படுத்துதல் - பிறருக்கு விளங்கப் பண்ணுதல், 'நானும் நினைத்து நினைத்துப் பார்க்கிறேன்; ஒன்றும் புலப்பட மாட்டேன் என்கிறதே' என்று நினைவுகூர்வார்கள். ஐம்பொறிகளாலும் துருவித் துருவி, தோண்டித் தோண்டி நுகர்ந்து அனுபவித்து அறியப்படுவனவே அறிவாதலை - 'புலமா'தலைக் கூர்ந்து நோக்கி அறியலாம்.

## 55. புலன் விசாரிக்கப்படுகிறது

புலன் விசாரித்தால் துப்புத் துலங்கும்; ஒருவரது குட்டு வெளிப்படும். கொலை, திருட்டு வழக்குகளில் புலன் விசாரணை செய்கிறார்கள். கொலை செய்யப்

பட்ட இடத்திற்குச் சென்று போலீசார் புலன் விசாரணை செய்வதாகச் செய்தி கூறுகிறது. இந்தப் புலன் விசாரணை எங்கிருந்து வந்தது?

## புலனறிதல், புலனறி சிறப்பு

தொல்காப்பியம் பகைவர் நாட்டில்போய் உளவறிதலை வேய், ஒற்று என்று குறிப்பிடும். புறப்பொருள் வெண்பா மாலை அவற்றுடன் 'புலனறி சிறப்பு' என்ற ஒன்றையும் சுட்டுகிறது. புலம், புலன் என்றால் இடம் எனவும் பொருள் தருதலின், பகைவர் நாட்டில் சென்று அங்குள்ள நிலையை உளவறிந்து வருதலே. புலனறிதல் எனப்பட்டது. அங்ஙனம் புலனறிந்து வந்தவருக்குச் சிறப்புச் செய்தலே புலன் அறிசிறப்பு எனப்பட்டது. அதன் தொடர்ச்சியாகவே இன்று புலன் விசாரித்தல் என்ற சொல் உருவாகியிருக்கிறது. ஒரு விபத்தைப் பார்த்ததும் குற்றவாளி யார் என்பது புலப்படாது. அந்த இடத்திற்குப் போய் விசாரிக்க விசாரிக்க உண்மை புலனாகிக் கொண்டே வரும்.

''காவலர் கொலை நடந்த இடத்திற்கு விரைந்தனர். கொலையாளி கைது செய்யப்பட்டான். தொடர்ந்து புலன் விசாரணை நடைபெறுகிறது'' என்ற வாசகம் உணர்த்துவதென்ன? அறிவு வழிப்பட்ட விசாரணை; சம்பந்தப்பட்டவரது துய்ப்பு, பழக்கம், பின்னணி போன்றவற்றைத் துப்புத் துலக்குதல்; தொடர்புள்ள இடத்திற்கே சென்று ஆராய்தல்; சம்பந்தப்பட்டவர்களை விசாரித்தல் என அனைத்தும் இதில் அடங்கக் காணலாம். புலன் என்றால்

ஐம்பொறிகளால் துய்ப்பன, அறிவு, இடம் என்று பல பொருள்படுகிறதல்லவா? 'புலன் விசாரணை' என்பதிலும், காலந்தோறும் தோன்றி வளர்ந்த இப் பொருளனைத்தும் அடங்கியுள்ளன. புலன் விசாரணை இத்துடன் ஒத்திவைக்கப்படுகிறது.

## 56. துப்பு விளக்கப்படுகிறது

'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை' (12) என்ற வான்சிறப்புக் குறளில், துப்பு என்ற சொல் ஐந்துமுறை திரும்ப வருகிறது. உணவு என்பது இதன் பொருள். துப்பார்க்கு - உண்பவருக்கு, துப்பாய - உண்பதற்குரியனவாகிய, துப்பு ஆக்கி - உணவுகளை உளவாக்கி, அது மட்டுமல்லாமல், அவ்வாறு உண்பவருக்குத் தானும் உணவாவதும் மழையேயாகும். அஃதாவது தண்ணீர்தான் பிற உணவுகளையும் விளைவித்துத் தருகிறது; தானும் உணவாகிறது. நீரின் இன்றியமையாமையை இங்ஙனம் விளக்குகிறது திருக்குறள். தமிழில் 'து' என்றாலே உண் என்று பொருள். நொ - நொந்துபோ, கா - காப்பாற்று. இங்ஙனம் வரும் ஓரெழுத்தொரு மொழிகளில் 'து'வும் ஒன்று.

'துப்புக் கெட்டவன்' என்று ஒருவனைத் திட்டும்பொழுது, ஒருவேளைச் சாப்பாட்டுக்குக் கூட வழியற்றவன் என அவனுடைய ஏழ்மையைக் குறிப்பிடுகிறோம். அதிலிருந்து, அவன் திமிராகப் பேசுவதைக் கண்டிப்பதற்காக 'மானங்கெட்டவன்', 'சுரணை அற்றவன்' என்றெல்லாம் பொருள்படுமாறு, அச்சொல்லைப் பயன்படுத்துகிறோம். ஒருத்தியைப்

பார்த்துத் 'தப்பிலி' எனத் திட்டுவதைப் பார்த்திருக்கலாம். 'துப்பிலி' என்பதுதான் அங்ஙனம் மருவிவிட்டது. போக்கற்றவன், வக்கற்றவன் என்பன போல, 'துப்புக்கெட்டவன்' 'துப்பற்றவன்' 'துப்பிலி' என்ற சொற்களும் எவ்வித வசதியும் வாய்ப்புமின்றி, உண்ண உணவுகூட இல்லாமல், மானமின்றி அலைபவரை - முயற்சியற்றவரைக் குறிக்கின்றன. 'துய்ப்பு' - நுகர்வது, உண்பது. அது 'து' வேர்ச்சொல்லில் பிறந்தது. து என்றால் 'உண்' என்பதாகலின் துப்பு - உணவு ஆயிற்று. துய்ப்பு - நுகர்வது. இதுவும் 'து' வேரில் பிறந்ததே. துப்பு - உண்பது. துப்பு இலி, துப்பு அற்றவன், துப்புக்கெட்டவன் எல்லாம் 'அறம் சாரா நல்குரவு' என்றபடி, முயற்சியின்மையால் வந்த வறியவனையும் அதனால் அவன் பசிக்கொடுமையால் தீயவனாக மாறுவதையும் குறித்தன. இயல்பான நல்குரவு (வறுமை) இரங்குதற்குரியது. முயற்சியின்றி, சோம்பேறியாய், ஒரு வேலையும் செய்யாமல் வறுமைப்படுவதே 'அறம் சாரா நல்குரவு'. அப்படிப்பட்டவர்களைத் துப்புக்கெட்டவன், துப்பிலி எனத் திட்டுவதில் தவறில்லை. போக்கிடம் அற்றவனைப் போக்கிலி என்பதை ஒத்தது இது.

## 57. துப்புரவு - பொருள் வளர்ச்சி

'துப்புரவு' வாரம் சொண்டாடினோமே தெரியுமா உங்களுக்கு? அதற்குப் பிறகு நாடே துப்புரவு ஆகிவிட்டது! எப்படி? திருவள்ளுவர் காலத்தில் துப்புரவு என்ற சொல் உணவைக் குறிக்கவே வழங்கியது. 'துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல் மற்றையவர்கள் தவம்' (263) என்ற குறளில் துப்புரவு

என்ற தொழிற்பெயர் நல்குரவு, தாக்குரவுபோல நின்று, உணவுண்ணுதலைக் குறிக்கிறது. 'துப்புரவு இல்லார் துவரத் துறவாமை, உப்பிற்கும் காடிக்கும் கூற்று' (1050) என்னும்போது, உண்பதற்கு எதுவுமே இல்லாதவர்களைக் குறிக்கிறது. 'துப்புரவாக எதுவுமில்லை' என்றால், மற்ற வசதிகள் இல்லை என்பதுமட்டுமன்றி உண்பதற்குக் கூட எதுவுமே இல்லை என்பது பொருள். மேற்சுட்டிய திருக்குறளிலும் 'துப்புரவு இல்லார்' - 'துப்புரவாக இல்லாதவர் துறவறத்தை மேற்கொள்ளாமலிருந்தால், அது பிறர் வீட்டு உப்புக்கும் கழுநீர்த் தண்ணீருக்கும் கேடு என்று பொருள்படுகிறது. இந்த உப்பையும் காடியையும் குடித்துக்கொண்டு வாழும் வாழ்வு ஒரு கேடா? அவர்கள் ஏன் துறவை மேற்கொள்ளக்கூடாது என்று 'நல்குரவு' அதிகாரத்தில் திருவள்ளுவர் கேட்கும்பொழுது, வறுமையில் செம்மை வேண்டுமேல் இல்லாததற்காகப் போய் இரந்துகேட்காமல், இருப்பதைக் கொண்டு வீட்டினுள் அடக்கமாய் வாழவேண்டும்; கிடைக்காதவற்றிற்கு ஆசைப்படாமல் துறவுமனம் கொள்ள வேண்டும் என்று இதன் கருத்துப் படர்கிறது.

## திருவள்ளுவரின் உலகவழக்குநடை

திருவள்ளுவர் பல இடங்களில் சங்க இலக்கிய நடையை ஒத்து எழுதிச் செல்கிறார். ஆயினும் தாம் எழுதுவது கூடுதலான மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்று கருதி, மக்கள் வழக்கில் உள்ள பல தொடர்களையும் நடைப்போக்கையும் அவர் ஆள்கின்றார் என்பதை, இங்ஙனம் நுட்பமாய்க் கண்டு அறியலாம். 'துப்புரவா' ஒன்றுமே இல்லை' என்று

இன்று ஒருவர் சொல்கிறார் என்றால், உண்பதற்கு என்று வீட்டிலே ஒன்றுகூட இல்லை என்பது பொருள். அது பிறகு முழுவதும், ஒன்று கூட இல்லாமல் எனப் பொருள்பட்டது. 'துப்புரவாக்கூட்டு' என்றால் 'ஒரு குப்பை செத்தைகூட இல்லாமல் கூட்டித் தூய்மைப் படுத்து' என்று இன்று பொருள்படுகிறது. திருவள்ளுவர் 'துப்புரவு இல்லார்' என்னும்போது, மற்ற வசதிகளெல்லாம் இல்லாதது மட்டுமன்றி, முழுவதுமாகத் துப்புரவுக்குக்கூட ஒன்றுமே இல்லாதவர் ஏன் துறவறத்தை மேற்கொண்டேனும் மானத்தோடு வாழக் கூடாது என்பது பொருள். இரந்து வாழ்வதைவிடத் துறந்து வாழ்வது மேலென்பதாம். திருவள்ளுவர் உலக வழக்கைத் தழுவியே தம் தொடரை அமைத்துள்ளமை இதனால் விளங்கும்.

இன்று 'துப்புரவு' செய்தல் என்பது ஒன்றுகூட இல்லாமல் நன்கு, முழுமையாகச் சுத்தம் செய்தல் என்ற பொருளிலும் வழங்குகிறது. இதுவரை சொன்னது 'துப்புரவா' விளங்கவில்லை என்று சொல்லி விடாதீர்கள்!

## 58. துப்பு துலக்கப்படுகிறது

துப்பு - துணை, ஊன்றுகோல், வலிமை என்றெல்லாம் பொருள் வளர்ச்சி கண்டது. 'துன்பத்துள் துப்பாயார் நட்பு' *(106)* என்றால், துணையாக ஊன்றுகோல் போல உதவுபவர்களைக் குறிக்கிறது.

'து' என்ற அடிச்சொல்லிலிருந்துதான் இவ்வாறு பல சொற்கள் உருவாகியுள்ளன. துவ்வாதவர் - நுகர்வதற்கு எதுவும் இல்லாதவர்கள். துவ்வாமை -

வறுமை. துவ்வான் - வலிமை இல்லாதவன், நுகர மாட்டாதவன் (சாப்பாட்டிற்கில்லாதவன்). துய்ப்பு - நுகர்தல், அனுபவித்தல்.

'துப்புத் துலக்குதல்' என்றால், ஒருவனுடைய சூழலை, வலிமையை ஆராய்தல் எனத் தொடங்கி, ஒரு கொலை அல்லது குற்றச் செயல் நடந்துவிட்டால் அதுபற்றிய சூழலை, நடந்த விதத்தைச் சோதித்தறிதல் - ஆராய்ந்து கண்டுபிடித்தல் என்றாகியிருக்கிறது. 'துப்பறிதல்' உளவறிதலாகும்.

துப்பு - ஒருவனுக்கு விருப்பமானவை, அவன் மகிழ்ந்து திளைக்கும் இடங்கள், அவனுக்கு வேண்டியவர்கள், அவன் வீட்டில் அவன் பயன்படுத்துவன என அவனது 'சூழல்' அனைத்தையும் துருவித்துருவி ஆராய்ந்து உண்மையைக் கண்டு பிடித்தலே துப்புத் துலக்குதலாகும். அவனைச் சார்ந்தவற்றைக் கொண்டு துலக்குவது - வெளிச்சத்திற்குக் கொண்டு வருவது இது. துலங்குதல் - சிறிது சிறிதாக ஒளி பரவுதல்; இருளை அழுக்கை, மறைபொருளை நீக்குதல்.

துப்பு, பவளம் என்றும் பொருள்படுமிடம் உண்டு. துவர் - செந்நிறம், பவளம்.

எச்சிலைத் துப்புவதையும் கவனிக்கலாம். ஒன்றைக் கடித்துத் துப்புவது, எச்சிலைக் கண்ட இடத்தில் துப்புவது நமக்குக் கைவந்த பழக்கம். இவை அச் சொல்லுக்கமைந்த வேறு பொருள்கள்.

## 59. அடர்த்தி

சோலையில் மரங்கள் அடர்த்தியாக உள்ளன. அடர்த்தியான காட்டிற்குள் இருப்பதால் வீரப்பனைக் கண்டுகொள்வது கடினம். கூந்தல் மிக அடர்த்தியாகவுளது.

நெருக்கமாக, செறிவாக, மிக அணுக்கமாக உள்ளவை அடர்த்தியாக எனப்படும்.

வட்டார வழக்கு ஒன்றில், சூதாடும் போது - இன்று 'சீட்டாடுதல்' என்னும் ஆட்டத்தில், அங்ஙனம் ஆடுபவர் ஏதும் வேலை கருதி, வெளியே போக நேர்ந்தால், தனக்குப் பதிலாக மற்றொருவரை ஆடச்சொல்லிச் செல்வார். இவ்வாறு மற்றவருக்காக ஆடுபவரை 'அடர்த்தி' என்பர். ஆங்கிலத்தில் ''Proxy' என்னும் சொல், இப்பொருளுடன் தொடர்புடையது. பதிலாள், வாக்களிக்கப் பதிலுரிமையுடையவன் எனப் பொருள்படும். இதுவும் Proximity நெருக்கம் என்பதிலிருந்து வந்ததுதான்.

'எனக்கு இவர் அடர்த்தியாகச் சிறிது நேரம் விளையாடுவார்' என்பர். அகராதியில் ஏறாத, வட்டார வழக்கு இது. இத்தகைய முழுமையான சொற்கள் உலக வழக்கிலிருக்கவும், இவற்றை விட்டுவிட்டுக் குறுமொழி, கொச்சைவழக்கு, பிழைபட்டவை போன்றவற்றை மட்டுமே உலகவழக்கென ஆள்பவர்களை என்ன சொல்வது? சொன்னாலும் புரியாது; தன்னாலும் தெரியாது என்பார்கள். இவர்கள் ஒலித்திரிபுகளையும் சிதைவுகளையுமே பயன்படுத்தித் தமிழைப் பாழ்படுத்தினால், நம் மொழி என்னாவது?

## 60. உயிர்

உயிர்ப்பு - மூச்சு. உயிர்த்தல் - பெருமூச்சுவிடுதல். உயிர் இருப்பதன் அடையாளம் உயிர்ப்பு - மூச்சுக்காற்று. இதனால் உயிர் - காற்று என்றும் பொருள்பட்டது.

உயிர் - உய் அடியாகப் பிறந்தது. உய்யப்பிறந்தது உயிர். உய்கை - ஈடேற்றம், துன்பம் நீங்குகை, தீங்குகளினின்றும் விடுபடுதல். உய்ந்தேன் - தப்பித்தேன், விடுபட்டேன். ஒன்றில் அகப்பட்டவன் அதைவிட்டுத் தப்பித்தல் அல்லது அத்துன்பத்தினின்றும் நீங்குதல் உய்கை அல்லது உய்தலாகும்.

உயிர் - உலகக் கட்டுகளினின்றும் உய்யப் பிறந்தது என்பது, சிவனியக் கோட்பாடு. ஆகவே உய் - உய்ய - உய்வதற்குத் தோன்றியது என வடலூர் ஊரன் அடிகள் விளக்கினார்.

தமிழில் உயிரெழுத்து என்பது இவ் உயிர் போன்றது. கண்ணுக்குத் தெரியாத அருவப் பொருள் போன்றது. அனைத்து மெய்களிலும் ஊடுருவி நிற்பது. அவை அனைத்தையும் இயக்குவது. தானும் தனித்து இயங்குவதோடு, பிறமெய்களுடன் சேர்ந்து இயக்கும் ஆற்றலால் உயிர் எனப்பட்டது.

மெய் - உடம்பு. இதனைப் 'பொய்' என்னாது 'மெய்' என்றது ஏன்? உடல் பொய்தானே? அழிவது தானே? உயிரின்றி இயங்காததுதானே?

ஆயினும் அந்த அருவமான உயிரைக் கண்ணுக்குக் காட்டும் இதுவே, பருப்பொருட் காட்சிதரும் 'மெய்' ஆகும். மெய் - உயிரிருப்பதை மெய்ப்பிப்பது. உயிர்

கட்புலனாகாவிட்டாலும் மெய்மூலம் அது மெய்ப்பிக்கப்படுவதால் 'மெய்' எனப்பட்டது.

உயிர்மெய் - இரண்டும் சேர்ந்து இயங்குவது. பிரிந்தால் மெய் இயங்காது; உயிர் புலனாகாது. 'மனிதர்களை உயிர்மெய்' என்றே சொல்லலாம். 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' (46) என்பது, உயிருடன் சேர்ந்தே இயங்கும் என்பதாம். உயிர் சேராத மெய் இயங்காது.

எழுத்துக்களுக்கு இங்ஙனம் பெயரிட்டிருப்பதே, ஒரு மெய்யியலின் முதிர்ச்சிபோல் தோன்றுகிறது. இப்பெயர்க்குறியீடுகள், இத்துணை நுட்பமாக உருவாக வேண்டுமேல், தமிழ் பல ஆயிரம் ஆண்டுகள் அன்றே வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இன்று தமிழ் கோயில்களிலும் மடங்களிலும் 'நீச பாஷயாக', 'சூத்திர மொழியாக' ஆங்கிலப் பள்ளிகளில் தமிழில் பேசினால் தண்டமென 'ஒரு தீண்டத் தகாத' மொழியாக, அதிகாரிகளிடம் மதிப்பற்ற மொழியாக, பயனற்ற - வேலைவாய்ப்பற்ற - வருமானம் தராத - கவைக்குதவாத மொழியாக ஆகிவிட்டது. இதைக் கண்டும் காணாதிருக்கும் தமிழினம் தன் அடையாளத்தை, நாகரிகத்தை, பண்பாட்டை இழந்துவருகிறது.

இதிலிருந்து விடுபட உயிருள்ள - உயிர்த்துடிப்புள்ள - உயிர் எழுச்சியுள்ள பல ஆயிரம் இளையோர் - இருபாலரும் ஒன்றுகூடி எழவேண்டும். காலம் தமிழைக் காக்கட்டும்.



மழலையர் முதல் ஐந்தாம் வகுப்பு முடிய அனைத்துப் பள்ளிகளிலும் தமிழே பாடமொழியும் பயிற்றுமொழியும் ஆகச் சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தப்பட வேண்டும்

மருத்துவம், பொறியியல், அறிவியல் உட்பட உயர்கல்வி அனைத்தும் தமிழிலும் தரவேண்டும். தமிழ்வழி உயர்கல்விக்குத் தனிப்பல்கலைக் கழகம் தொடங்க வேண்டும்.

தமிழே முழுமையான ஆட்சிமொழியாக வேண்டும். தமிழ் கற்றவர்க்கும் தமிழ் வழி கற்றவர்க்கும் தமிழகத்தில் வேலை வாய்ப்பும் ஊதிய உயர்வும் பதவியுயர்வும் தரவேண்டும்.

தமிழர் கட்டிய திருக்கோயில்களிலும் தமிழர் சடங்குகளிலும் இசையரங்குகளிலும் தமிழே பயன்பாட்டு மொழியாக வேண்டும்.

நடுவணரசு தமிழைச் செவ்வியல் மொழி என அறிவித்து, அதன் வளர்ச்சிக்கு உதவ வேண்டும். தேசிய மொழிகளில் ஒன்றாகிய தொன்மைமிக்க தமிழைப் பாராளுமன்ற நடைமுறை மொழியாக ஏற்கவேண்டும். திருக்குறள் இந்தியத் தேசியநூலாக அறிவிக்கப்பட வேண்டும். தாய்த்தமிழ்ப் பள்ளிகள் தழைக்க வேண்டும். உலகத் தமிழினம் ஒன்றுபட வேண்டும்.

*தமிழண்ணல்*
தமிழ்அடிசூடி